விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 141 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 25 புதன்கிழமை (08.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சாவதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## நான் ஜனாதிபதியானவுடன்
# தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு
## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)
நான் ஜனாதிபதியாக வந்தவுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்கியே தீருவேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## வித்யா கொலை வழக்கு
# நீதியரசர் குழுவிலிருந்து ஒருவர் விலகல்

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவைச் சேர்ந்த மாணவி வித்யா கொலை வழக்கில், மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சுவிஸ்குமார் உள்ளிட்ட 5 பேர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய நீதியரசர்கள் குழுவில் இருந்து ஒருவர் விலகி 15

# கிளிநொச்சியில் விபத்து; இளைஞன் மரணம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி ஏ9 வீதி பரந்தன் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இச்சம்பவம் நேற்று முன்தினம் இடமபெற்றுள்ளது.
இதில் வவுனியா நெலுங்குளத்தைச்சேர்ந்த சௌந்தரநாயகம் புவலரசன் (வயது-27) என்பவரே உயிரிழந்தவராவார்.
ஆடை தொழிற்சாலை ஊழியர்களை 15

## அதீத வெப்பம், வெப்ப அலை
# யாழில் ஐவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் நிலவும் அதீத வெப்பம் மற்றும் வெப்ப அலை காரணமாக 05 பேர் உயிரிழந்துள்ளனர் என யாழ். போதான வைத்தியசாலையின் பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா தெரிவித்துள்ளார்.
யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
யாழ்ப்பாணத்தில் தற்போது அதிக வெப்பமான காலநிலை காணப் 15

# தமிழ்க் கைதிகளைச் சந்தித்த சிறீதரன், கஜேந்திரன் எம்.பி



(கொழும்பு)
கடந்த பெப்ரவரி மாதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளியும், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவருமான செல்வநாயகம் ஆனந்தவர்ணன் (அரவிந்தன்) மற்றும் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக நீதிமன்றில் முற்படுத்தப் 15

# மல்லாகத்தில் இயங்கி வந்த சட்டவிரோத கொல்களத்துக்கு சீல்



(யாழ்ப்பாணம்)
மல்லாகத்தில் இயங்கி வந்த சட்டவிரோத கொல்களத்துக்கு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நேற்று சீல் வைக்கப்பட்டது.
நேற்று முன்தினம் தெல் லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீள நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நீதிபதி திருமதி சுபராஜினி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது சட்டவிரோத கொல்கள வளாகத்தை சீல் வைக்க நீதிபதி கட்டளை 15

# வண்டுகள் மொய்த்த பழுதடைந்த பொருள் விற்பனை
## திருநெல்வேலியில் வர்த்தகருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தண்டம்

(யாழ்ப்பாணம்)
வண்டுகள் மொய்த்த பழுதடைந்த பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த திருநெல்வேலி பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றின் உரிமையாளருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நீதிமன்றினால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
பொதுச் சுகாதார பரிசோதகரினால் 15

# தெல்லிப்பழையில் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணிக்குள்
## மக்கள் பிரவேசிக்க பாதை அனுமதி

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை ஒட்டகப் புலத்தில் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதை அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.8 ஏக்கர் காணிக்குள் பொது மக்கள் பிரவேசிப்பதற்கான பாதைகளை திறக்குமாறும், இணைந்த வீதிகளை பயன்படுத்த அனுமதிக்குமாறும் வடக்கு 15

# போதைப் பொருளுடன் வவுனியாவில் இளைஞன் கைது

(வவுனியா)
வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
புளியங்குளம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப் 04

# யாழில் இராணுவத்தினரை கிண்டலடித்து காணொளி
## இளைஞனின் செயலால் சர்ச்சை

(யாழ்ப்பாணம்)
யாழில் இளைஞர் ஒருவர் இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து பகுதியளவில் விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் நுழைந்து கடமையில் நின்ற இராணுவத்தினரை காணொளி எடுத்து கிண்டலடித்து சமூகவலைத்தளத்தில் பதிவேற்றியமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
குறித்த இளைஞன் பலாலி வடக்குப் பகுதியில் அண் மை யி ல் 15

நடுவு நிலை தவறாது நின்று நிலைக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 - 06 - 1949

மறைவு 06 - 05 - 2024

## திருமதி தர்மலிங்கம் கமலாதேவி

நீர்வேலி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் கமலாதேவி கடந்த திங்கட்கிழமை (06.05.2024) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் மருமகளும் க.தர்மலிங்கம்(முன்னாள் உப தவிசாளர், வலி கிழக்கு பிரதேச சபை - புத்தூர்) அவர்களின் அன்பு மனைவியும் வைத்திலிங்கம், இலட்சுமி, பராசக்தி, காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் சகோதரியும் கமலலோஜினி (சுவிஸ்), சிவநாதன்(கனடா), சிறீகரன்(ஆசிரியர் - யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சரவணபவானந்தன், மிருநாளினி, நிஷாநந்தினி (தேசிய சேமிப்பு வங்கி மேற்தரக்கிளை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியாரும் பிரியதர்சினி, பிரவீந், பிரஷா, பிரமிலன், பிரணவி, ஹரீஷன், பிரஹர்சன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.05.2024) வியாழக்கிழமை காலை 08 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கரந்தன் றோட்,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி
077 958 6955

(685)

தகவல் :
த.சிறீகரன்(மகன்)
ஆசிரியர் - யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை.

(696)

077 88 62 927

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

**வீடு விற்பனைக்கு**

இருபாலை டச்சு வீதியிலிருந்து 2 ஆம் காணியில் அமைந்த புதிய வீடு விற்பனைக்கு உண்டு. காணியின் அளவு 1.5 பரப்பு

உரிமையாளர்

077 80 93 293

(693)

**லங்கா மஹால் பிறைவேட் லிமிட்டட்**
(உள்நாட்டு வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை)

வேலையாள் தேவை
(ஆண்,பெண்)

A/L தகைமையுடைய (கணினி அறிவு அடிப்படை) வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

65, 2nd cross street, Vavuniya.

077 839 3974

(669)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
செல்வி. தயாளினி சுப்பிரமணியம்
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி பூபதி சுப்பிரமணியம்

அவர்கள் 07.05.2024 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


தோற்றம் 1940.05.19

மறைவு 07.05.2024

ஆசிரியர் கழகம்
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

(C-0311)

# மரண அறிவித்தல்



மலர்வு 02.01.1937

உதிர்வு 06.05.2024

## திருமதி தனபாக்கியம் விசுவலிங்கம்

யாழ்ப்பாணம் சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் அக்கராயன், அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியம் விசுவலிங்கம் அவர்கள் 06.05.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லமுத்து தம்பதிகளின் பாசமிகு புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா விசுவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் அமரர் சிவபாக்கியம், பரராஜசிங்கம், ராஜேஸ்வரி, அமரர் ரத்னசிங்கம், அமரர் சபாரட்ணம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோரதன்(சுவிஸ்), செல்வமலர்(கனடா), யோகநாதன் (அக்கராயன்), வசந்தாதேவி(அதிபர் - கிளி/ஸ்கந்தபுரம் இல.02, அ.த.க.பா) (ஸ்கந்தபுரம்), யோகேஸ்வரி(ஜேர்மன்)(முன்னாள் - ஆசிரியை கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்), அமரர் விக்னேஸ்வரி(அளவெட்டி), சிவகுமார்(கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும் நந்தினி(சுவிஸ்), பாசல் (தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர்), வல்லிபுரம்(கனடா), புஸ்பரஞ்சினி (அக்கராயன்), விமலேஸ்வரன்(ஸ்கந்தபுரம்), அமரர் கிருஸ்ணானந்தன் (ஜேர்மனி), கனகலிங்கம்(அளவெட்டி), அருள்வதனி(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் புரஞ்சயன், மதுரன் - நனிலை, லவகுசன்(சுவிஸ்), ஸ்ரீறங்கநாதன் - சாந்தரூபி(லண்டன்), கோகிலன் - ஷிவானி, ராகுலன் - கிருஸ்னவேனி(கனடா), டயாயினி, பிரணவன் - கஜாஜினி, நேசராஜ் - பவித்திரா, சகிராஜ்(இலங்கை), மனோராஜ்(கனடா), அமரர் பகிராஜ், துவிராஜ், தட்சாயினி(இலங்கை), ஐஸ்வர்யா, சந்தியா, அஜித்(ஜேர்மன்), கிஷாந்தன், கபேசன் - மேனுஷா, கஜிந்தன், கஜிந்தினி, தேனுஷா(இலங்கை), வசி, கவிராஜ், சஜீனா(கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் அதிரன், ஸ்வர்னிகா, அனிஷா, அனன்யா, லவிஷன், அனிக்கா, அர்வின், அஷ்வி, அஷ்வந், அஹானா, அந்விகா, ஆருத்வி, யஸ்விதன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.05.2024 நாளை வியாழக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லமான மகாத்மா வீதி அளவெட்டி வடக்கு அளவெட்டியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளவாலை கிராயிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

சுவிஸ் - 0041762676555
கனடா - 0014166789876
அக்கராயன் - 077 176 0008
அளவெட்டி - 077 069 7201

தகவல் :
குடும்பத்தினர்

(C-0306)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 08 - 1938 | 07 - 05 - 2024 |

## செல்வி கமலேஸ்வரி வல்லிபுரம்

### (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கமலேஸ்வரி வல்லிபுரம் அவர்கள் நேற்று (07.05.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - வைரவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, சிவபாக்கியநாதன், சிவசுந்தரம், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், இராசையா, அன்னபூரணம் மற்றும் தவமணி, சிதம்பரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2024) புதன்கிழமை யாழ்.பிரதான வீதியில் உள்ள White House மலர்ச்சாலையில் நடைபெற்று பி.ப 2.00 மணிக்கு பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : மருமகன்
சி.செல்வன், சி. கேதீஸ்
தொ.பே : 077 7834 603

(695)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 - 04 - 1930 | 07 - 05 - 2024 |

## சுப்பிரமணியம் கணேசன்

நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம். கணேசன் அவர்கள் 07.05.2024 நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லக்குட்டி - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இசைமணி. மோகனாம்பிகை(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் துர்க்காதேவி, சுபத்திராதேவி(ஆசிரியர் - யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மதுராதேவி(கனடா), ஸ்ரீமாயவன்(இந்தியா), காலஞ்சென்ற செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தவராசா, காலஞ்சென்ற சிறீஸ்கந்தராசா, மகேந்திரராசா(கனடா), வதனி(இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வத்சலா, ஆதிரை, ஆர்த்தியா, ஷபரினி, சிவமங்கை, சீரழகி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (09.05.2024) வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நுணாவில் கல்வயல் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே : 077 45 46 809 (698)
தகவல் : குடும்பத்தினர்

அடுத்தடுத்து சுப்பர் பரிசு வெற்றியாளர்களை உருவாக்கும்



Handahana ராசி சுப பலன்

NLB தேசிய லொத்தர்

6 நாட்களில் 5 சுப்பர் பரிசு வெற்றியாளர்கள் !

2024.04.27 சீட்டிழுப்பு - 767
ரூ.3,208,254.64
சீதுவ

2024.04.28 சீட்டிழுப்பு - 768
ரூ.3,000,000.00
பலாங்கொட

2024.04.29 சீட்டிழுப்பு - 769
ரூ.3,000,000.00
பன்னல

2024.05.01 சீட்டிழுப்பு - 771
ரூ.3,002,394.80
பதியதலாவ

2024.05.02 சீட்டிழுப்பு - 772
ரூ.3,000,000.00
கிரிந்த

(சி-2299)

ஆண்டிலே இது வரைக்கும் சுப்பர் பரிசு வெற்றியாளர்கள் 10

ராசி சுப பலன்
NLB
பொருத்தி உங்களது மில்லியன் பரிசுக் கனவை நனவாக்கிடுங்கள்

ஆண்டிலே இது வரைக்கும் 10 இலட்ச வெற்றியாளர்கள் 72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மே, 11.12.2024.

(சி-103)

# கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியை திருமதி சுபத்திராதேவி ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் சுப்பிரமணியம் கணேசன்**

அவர்கள் அமரத்துவம் அடைந்த தையிட்டு ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத் துயருடன்: **சேவையாளர் சங்கம், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

(048)

## தமிழ் மக்களின்...

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நான் என்றுமே குரல் கொடுத்து வருகின்றேன்.

நான் ஜனாதிபதியாக வந்தவுடன் அவர்களுக்கான உரிமைகளை அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களுக்கான தீர்வுகளை வழங்கியே தீருவேன்.

இன, மத பேதமின்றி அனைத்து மக்களுக்காகவும் என் சேவை தொடரும்." என்றார். (ம-7,10)

## வவுனியாவில்...

படையில் குறித்த பகுதியில் விசேட அதிரடிப் படையினர் திடீர் சோதனை ஒன்றை நடத்தினர்.

இதன்போது தாண்டிக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோ 124 கிராம் உடைய கஞ்சா போதைப் பொருளை மீட்டுள்ளனர்.

வவுனியா செக்கட்டிப்பிளவு பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,10)

## கேள்வி அறிவித்தல்
## நெடுந்தீவு பிரதேச சபை
## பராமரிப்பு வேலைத்திட்டம் (Maintenance Fund) - 2024

01. பராமரிப்பு வேலைத்திட்டம் 2024 நிதி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களிற்கு கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், உள்ளூர் அதிகாரப் பெறுகைக்குழு, நெடுந்தீவு பிரதேச சபை, அவர்கள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதிவேலை அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு பெற்றிருத்தலும் வேண்டும்.
05. தகைமைத் தேவைப்படுத்தல்கள் கேள்வி ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் கேள்வி ஆவண அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், நெடுந்தீவு பிரதேசசபை, பிரதானவீதி, நெடுந்தீவு, (தொலைபேசி: 0212215211) இல் இருந்து 09.05.2024 தொடக்கம் 22.05.2024 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
07. மேற்கூறிய இடத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் 09.05.2024 ம் திகதியிலிருந்து 22.05.2024 திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் கேள்வி ஆவணம் ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் செயலாளர், நெடுந்தீவு பிரதேசசபை, பிரதானவீதி, நெடுந்தீவு எனும் முகவரிக்கு 22.05.2024ம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 14.05.2024 திகதி காலை 10.30 மணிக்கு நெடுந்தீவு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும்.

| இல. | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீடு செலவு (VAT தவிர்ந்த) (மில்.ரூபா வில்) | ஒப்பந்தக் காலப்பகுதி | தேவைப்படும் தரம் | விலைமனுவை சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலப்பகுதி | | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் காலப்பகுதி | திகதி | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| 1 | NP/14/41(7)/02/ MF/2024/01 | தூங்காலை வீதி மீள்புனரமைப்பு | 3.0 | 90 நாட்கள் | C8 or Above (Road) | 63 நாட்கள் | 24.07.2024 | 30,000.00 | 21.06.2024 |

**தலைவர்**
**உள்ளூர் அதிகார பெறுகைக்குழு,**
**நெடுந்தீவு பிரதேச சபை,**
**08.05.2024**

(C-0307)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**விளம்பர ஒலிபரப்பு சேவை (நவீன சந்தை கட்டிடத்தொகுதி - மேல்மாடி), பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை, பண்ணை கடற்கரைப் பூங்கா என்பன குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024**

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | - ரூபா 1,180.00 (வற் வரியுடன்) |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | - 08.05.2024 21.05.2024 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை) |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 22.05.2024 மு.ப 10.00 மணி வரை |
| கேள்வி திறத்தல் | - 22.05.2024 .மு.ப 10.00 மணிக்கு |

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
   அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 22.05.2024 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கேள்வி சமர்ப்பிப்பவர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடச் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. குத்தகை தொடர்பான நிபந்தனைகள் அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

| இல | விபரம் | குத்தகைக் காலம் | பிணை வைப்பு | ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | விளம்பர ஒலிபரப்பு சேவை (நவீன சந்தை கட்டிடத்தொகுதி - மேன்மாடி) | 01.06.2024 - 31.12.2024 | 10,000.00 | 533,166.66 |
| 2 | பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 23.06.2024 - 31.12.2024 | 10,000.00 | 522,222.22 |
| 3 | பண்ணை கடற்கரைப்பூங்கா | 01.07.2024 - 31.12.2024 | 2,000.00 | 102,500.00 |

மேலதிக தகவல்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-0310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025



**சந்திரனை ராசிநாதனாகக் கொண்ட கடக ராசி அன்பர்களே!** நீங்கள் எதையும் திட்டமிட்டு செய்பவர்கள். கிரகநிலை: தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு குரு மாறுகிறார். உங்களது தைரிய ஸ்தானம் - பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானம் - சப்தம ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஸ்ரீகுரோதி வருடம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கில திகதி 01.05.2024 அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன்கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுப நாமயோகமும் - பவ கரணமும் - சித்தயோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் மாலை 05.01 இற்கு துலாம் லக்னத்தில் குரு பகவான் மேஷ இராசியிலிருந்து ரிஷப இராசிக்கு மாறுகிறார்.

வகைப்படுத்தி செய்து காரியமாற்றுவீர்கள். விருப்பு, வெறுப்பின்றி அனைவருக்கும் உதவி செய்வீர்கள். நீங்கள் சார்ந்துள்ள துறைகளில் சாதனை புரிவீர்கள்.

புதிய வாகனங்களை வாங்கி மகிழ்வீர்கள். உங்களின் தேவைகள் எளிதாகப் பூர்த்தியாகும். நீங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் நீதிமன்றத்திற்கு வெளியில் சமாதானமாக முடியும். உங்கள் மீது அபாண்டபழி சுமத்தியவர்கள் தவறுகளை உணர்ந்து வருத்தம் தெரிவிப்பார்கள். தெய்வ பலத்தால் செயற்கரிய சாதனைகளைச் செய்வீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருப்பதால் வெளியூருக்கு சுற்றுலா சென்று வருவீர்கள். இல்லத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். புதிய செயல்களுக்கு அத்திவாரம் போடுவீர்கள். உறவினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். இல்லத்தில் களவு போயிருந்த பொருட்கள் திரும்பவும் கை வந்து சேரும்.

சமுதாயத்தில் உயர்ந்தோரின் நட்பு உங்களுக்கு உந்துசக்தியாக அமையும். உங்கள் செயல்கள் இடையூறுகளின்றி சுலபமாக நிறைவேறும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்தவர்கள் மீண்டும் வந்து இணைவார்கள். உறுதியின்றி செய்த செயல்களில் ஒரு நிரந்தரப் பிடிப்பு ஏற்பட்டு மளமளவென்று நடக்கத் தொடங்கும். சில அநாவசியச் செயல்களுக்கு கைப்பொருள்களை இழந்த நிலை மாறும். மற்றபடி சகோதர,

நண்பர்கள், கூட்டாளிகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்காது. ஆகையால் புதிய முதலீடுகளைத் தள்ளிப் போடவும். உங்களுக்குக் கீழ்வேலை செய்பவர்களை அனுசரித்து நடந்து கொள்ளவும்.

அரசியல்வாதிகளின் அந்தஸ்தில் சிறிது குறைபாடுகள் உண்டாகும். ஆகவே கவனமுடன் செயற்படவும். தொண்டர்களின் பாராமுகத்தால் கோபமடையாமல் கடமைகளைச் செய்து வரவும். பேச்சில் கண்ணியம் குறையாது கவனமாக இருக்கவும். கலைத் துறையினர் புதிய ஒப்பந்தங்களைச் செய்வீர்கள். அதேசமயம் எதிர்பார்




த்த புகழும், பாராட்டும் கிடைப்பதில் கால தாமதம் ஏற்படும். பொறுமையுடன் செயற்பட்டால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். போகப் போக உங்களுக்கு சாதகமற்ற நிலைமைகள் மாறிவிடும்.

பெண்மணிகளுக்கு புத்தாடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவரிடம் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கும். பணவரவுக்கு எந்தக் குறைவும் இருக்காது. பிள்ளைகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும். மாணவமணிகள் முனை

கள் நிறைவேறும். இலட்சியங்கள் கைகூடும். மனதிற்கு நெகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். நிதானம் தேவை.

**பூசம்:** இந்தக் குருப்பெயர்ச்சியால் ஓடர்கள் எடுப்பதில் கவனம் தேவை. லாபம் உண்டாகும். கடின உழைப்பு உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும். சிறு சிக்கல்கள் ஏற்பட்டு மறையும். கவனத்துடன் செயற்பட்டால் சிக்கல்களைத் தவிர்க்கலாம். சின்னச் சின்ன செலவுகளை சந்திக்க நேரிடலாம். உழைப்பிற்கான ஊதியம் சற்று குறைவாகக் கிடைக்கலாம். மனதைரியத்தால் வெற்றி காண்பீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும். உற்சாகமாக எதையும் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். விருந்து கேளிக்கைகளில் பங்கு கொள்வீர்கள். கடன் பிரச்சினை குறையும். வீண் அலைச்சல், வீண்பயம் குறையும். அடுத்தவர் செய்யும் இடையூறுகளையும் உங்களுக்கு சாதகமாக பயன்படுத்தும் சாமர்த்தியத்தைப் பெறுவீர்கள்.

**ஆயிலியம்:** இந்த பெயர்ச்சியால் எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்து விடுவீர்கள். வீண் செலவை உண்டாக்குவார். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடுவதில் பின்னடைவு ஏற்படும். பண வரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும். ஆன்மீக தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் 'வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். உத்தியோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். உத்தியோகத்தர்கள் புத்தி சாதுரியத்தால் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாகச் செய்து முடிப்பார்கள்.

**பரிகாரம்:** அம்மன் வழிபாடு எல்லா துன்பங்களையும் போக்கும். எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும் .

சிறப்பு பரிகாரம்: வேப்பிலையை அருகிலிருக்கும் அம்மன் கோவிலுக்கு அர்ப்பணித்து அர்ச்சனை செய்து வணங்கவும் ; சொல்ல வேண்டிய மந்திரம்: "ஓம் ஸ்ரீகர்ப்பாயை நம" என்ற மந்திரத்தை தினமும் 6 முறை சொல்லவும் ;

**அதிஷ்ட எண்கள்:** 2, 3, 7 ; **அதிஷ்ட ஹோரைகள்:** சந்திரன், சுக்கிரன், குரு ; **அதிஷ்ட திசைகள்:** மேற்கு, தெற்கு ; **அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வியாழன், வெள்ளி

## உங்களின் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்

**கடகம் ராசியினருக்கான குருப் பெயர்ச்சி பலன்கள்:** குருப் பெயர்ச்சியில் சுறுசுறுப்புடன் பணியாற்றுவீர்கள். உங்கள் சேமிப்பு விடயங்களில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். உங்கள் பேச்சில் பொறுமையும் நிதானமும் இருக்கும். உற்றார், உறவினர்கள் நண்பர்களிடம் சுமுகமான உறவு தொடரும். உடல் உபாதைகள் நீங்கும். எதிர்பாராத புதிய பொறுப்புகள் தேடி வரும். இதனால் கூடுதல் வருமானமும் கிடைக்கும். சமுதாயத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். உங்களின் நேர்மையான நடத்தையை அனைவரும் பாராட்டுவார்கள். உங்களின் விவாதத் திறமை அதிகரிக்கும். முக்கியமான விவாதங்களில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு அதிகரிக்கும். தத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபட மனம் விளையும். உங்களின் செயல்களை முறைப்படுத்தி.

சகோதரிகளால் சில பிரச்சினைகள் ஏற்படலாம். அவர்களுக்கு உதவி செய்ய நினைத்து சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடலாம். என்றாலும் அந்தப் பிரச்சினைகள் தானாகவே விலகிவிடும். உங்களின் தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் அதிகரிக்கும்.

உத்தியோகத்தர்கள் தங்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவர்களை இனம் கண்டு விலக்குவீர்கள். வேலைப்பளு அதிகரித்தாலும் அவற்றைச் சிறப்பாகச் செய்து முடித்து நற்பெயர் வாங்குவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். உங்களின் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். மதிப்பு மரியாதை உயரும். வியாபாரிகள் திட்டமிட்ட வேலைகளில் கடுமையாக உழைப்பீர்கள். காலதாமதம் ஏற்பட்டாலும் உங்களின் செயல்கள் வெற்றி பெறும். ஆனால்

ப்புடன் செயற்பட்டு நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். திட்டமிட்ட வேலைகளில் பதற்றப்படாமல் ஈடுபடவும். அதே சமயம் உங்கள் முயற்சிகளுக்கு ஆசிரியர்களிடம் நல்ல பாராட்டு கிடைக்கும்.

**புனர்பூசம் 4ஆம் பாதம்:** இந்த குருப் பெயர்ச்சியால் மனத்திருப்தியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். பயணம் செல்ல நேரலாம். மனதுக்குப் பிடித்தவர்களை சந்திக்க நேரிடலாம். பெரியவர்களின் சந்திப்பு மனதிற்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். உடனிருப்பவர்களுடன் எச்சரிக்கையாகப் பழகுவது நல்லது. இரகசியங்களை கையாளுவதில் கவனம் தேவை. அதீத கவனத்துடன் செயற்படுவது உங்களுக்கு பதவி உயர்வு மற்றும் வெற்றியைத் தேடித் தரும். எதிர்பார்த்த வாய்ப்புகள் வந்து சேரும். சிலருக்கு நெடுநாளைய ஆசை

(தொடரும்)

# இராசிபலன்

08.05. 2024
சித்திரை 25, புதன்கிழமை
அமாவாசை முற்பகல் 9.22 மணிவரை

பரணி பிற்பகல் 2.17 மணிவரை
சுபநேரம் 4.25-5.55 மணிவரை
இராகுகாலம் 11.55-1.25 மணிவரை

சித்திரை பரணி, கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம் - பூசம், உத்தரம்


**வளவன்**





கனவுப் பலிதமுண்டு, வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பணியில் சில மன உளைச்சல் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்பண்டு.





குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, செயற்பாட்டில் தீவிரம் கூடும்.





சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பொருளாதார நிலையில் உயர்வு காணும் நாள், போசன நன்மையுண்டு.





பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.





விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், நண்பர்களின் சந்திப்பால் சுப விரயங்கள் ஏற்படலாம், முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.





ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




திட்டமிட்ட காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொதுவாழ்வில் புகழ் கூடும்.




முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாடு பெருமை சேர்க்கும், பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும்.





இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வெளியூர் பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.




கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம்.




சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

துன்பம் என்ற ஒன்று இருப்பதால்தான் சுகம் இருப்பது தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் தெரிவானவர்களின் பெயர் விபரங்கள்

**Kayts-** Archunan Dunston, Anton Charlesjanson Charles Diluxson , Selvanayagam Arulraj, Lakshika Ilamurugan, Rageetharan Arvina.

**Chankanei** - Nijantha Jogasinkam, Ravichandran Hariharan.

**Sandilipay** - Vithusha Varathavithuvan, Lenin Arivalakan Suhashini, Bava tharani Chandrabala.

**Thellippalei** - Sriskantharasa Anista, Kirubalasingam Thivya, Kirupamoorthy Niresh, Thusyanthini Sakthivadivel, Shanmuganathan Maruthasalan, Yugathas Nixan.

**Uduvil** -Uthayaraj Uthajanuja, Sinthusa Arulprijan, Vithusha Rasasri, Thayanantharaja Saratharan, Suthakaran Piratheepa, Iruthayanathan Andrew Anorge , Anaksica Ulaganathan.

**Koppai-** Selventhiran Venuga, Navanenthiram Piratheeb, Tharshika Jenis, Abisha Ganeshamoorthy , Sakathevan Majinthan, Nanthakumar Thanushan, Sivalingam Vijayatharsini.

**Maruthankerny-** Kirushna Vithuja, Thiruppathy Nishanthan , Kirushnanathan Niththiya.

**Point Pedro** - Subramaniam Vinoth, Alfredgnanamany Luckasneel, Nishan Chaminda Thevaky, Dilaxsica Ketheeswaran, Vickneswaramoorthy Aravinthan, Viththiyaparan Sathurthika.

**Chawakachcheri** - Kathoosa Nagarasa, Gobiga Kamaleswaran, Sriskanthamoorthey Rubakanan, Ramajeyam Tharshan, Kanthavanam Kopika, Keerthiga Somasundaram , Jeyakumar Nitharshan , Nilany Kandasamy , Kajamugan Ranusiya , Amirthalingam Naresh.

**Nallur** - Sobiga Tharmarasa , Lavanya Karunakaran.

**Jaffna-** Buronija Ravindran, Gnanasegaran Suvastiga, Anton Selvathayalan Annabavatharani.

**Velanai** - Rajeswaran Sugaraj, Kirubakaran Jeevanantha , Sothilingam Keerthiga, Kurupalan Mahinthan, Laxshana Thilaganathan, Makendren Jeyaram , Pirusha Balasritharan.

**Delft** - Vikkineswaran Sathursan, Kanagalingam Abishan,

**Karainagar-** Arulraja Thivya, Pathmanathan Sivappriya.

**Mannar-** Basel Nikhal Antony Sakelan Cooneghe, Musim Fathima Safana, Thevathas Sujanthan, John Alfred Rexsan Vinoth, Sahayaraj Ann Dilshany Fernando , Moosim Fathima Saayila, Jerad Francis Ilango Joseph Perera, Thevathas Niroshan, Gnanaraj Eileen Gayanee, Sulaimaan Abisha, Julius Keerthika, Francis Mary Niranjana

**Manthai-** Muhammath Abdul Cathar Umais, Anthonipillai Emarensiya, Amutharasa Keerthika

**Madu** - Yalini Silva Kingsly Silva , Muthurajah Priyanga

**Nanaddan** - Peter Gnanaprakasam John Paul Mark, Baskaran Mary Paustina, Lambert , Soosainathan Susmitha, Felix Lavanya Leo Croos, Arulnathan Nanthini, Thirugnanam Anne Piriyanthan, Jenipha Jerojini Prenthira, Mathespillai Salini, Victor Karunarasa Devit Sutharsan, Maria Priskila Jagatheesan Croos, Joseph Christy Vijirajan Brouno Delac, Mohammed Jawath Mohammed Jazeen.

**Musali** - Seiyathu Haja Mahathun Mahamed Sabnas, Mujeebur Rahman Mohamed Ayyash, Ibraheem Aasim, Abdul Sukkoor Wajuhabdeen Rakees Mohamed, Abdul Kaiyoom Ifthihaj Banu, Sarafdeen Abdul Haadhi, Juwailudeen Jasan.

**Vavuniya** - Thanapalasingam Mithusa, Kokilavathanan Sajiththa, Velmurugan Partheepan , Nishanthiny Kanthasamy, Abinaya Kunarasa, Thillairasha Thanushan, Thevatheelan Mathusha, Dharmasenage Sumeda Sampath , Ranasingha Mudiyanselage Amila Pathum Ranasingha, Dinesha Pubuduni Chandrapala , Nethmi Rashmika Jayarathna, Selvarajah Nilan, Rilwan Sanoordeen, Kajenthiran Thuja, Srikanthan Jatheeskkannaa, Sivalingam Sujenthiran

**Vengalacheddikulam** - Mohammadhu Mahusun Mohammadu Dilshan, Meerashahibu Mohammad Farhan, Meerasahibu Fathima Savna, Nishanthan Shobana , Penildas Vemansan, Dinusha Yugarajan.

**Thunukkai-** Vijayaraj Vimalraj, Thunukkai Kenthini Nakenthiran, Theiventhiram Ajanthan, Tharsana Kanesh ,Andiyappan Thavachchelvi, Sumenaka Nagendra , Naguleswaran Kajani

**Pudukuduirippu-** Alakarasa Sanjithan, Francis Xavier Hamildan Dias.

**Oddusudan**-Rasaiya Thusyanthan , Raththinasingam Linisha, Linoshika Balasubramaniam, Logarajah Anoya , Thiruchchelvam Gowjigan, Shanmugam Kajalogan, Yogalingam Thusika, Powsiha Antonythash, Makendrarasa Sarmila

**Maritimepattu** Kunasingam Hamshayini, Amalathas Ajithira, Thanabalasingam Banusha, Kanagaratnam Shanseevan, Abarna Kabirajan, Rameem Mohamed Rashid .

**Pachchilaipalli** -Sanjika Thirukaran , Maruthaveeran Noorjitha

**Kandawalai** -Thayaparan Sayanthika, Sooriyapiragash Kopikirushna

**Karachchi**-Nirojan Gopina , Karththiga .Nagendram, Jeyakkody Pinold , Perumal Sathasivam , Niththiyananthan Thanusha , Navaradnam Thayanithy, Yogaraththinam Janushan, Raveenthiranath Vithusayini, Rasenthiram Parththipan, Umapathy Subahiny, Santhirasekaran Santhirayavitha , Thireskoncy Selvakumar

**Punakari-** Mahiliny Nahenthiran, Mahendiran Jesumerildan, Kailanathan Kajenthiny Antony Francis Abisayini.

# யாழ். மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் வரி யிறுப்பாளர்களின் நன்மை கருதி, 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை உட்புற நுழை வாயில் நடமாடும் சேவை நடை பெறவுள்ளது.

14, 25 ஆம் வட்டாரங்களிற் கான ஆதனவரி அறிவித்தல் கள் விநியோகித்தல், பெயர்மாற்ற விண்ணப்பப் படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்வதுடன் அனைத்து வட்டாரங்களினதும் இதுவரை காலமும் செலுத்த வேண்டியுள்ள ஆதனவரி நிலுவைகள் மற் றும் நடப்பாண்டு ஆதனவரி, தண்ணீர்க்கட்டணம் மற்றும் வியாபார வரி, போன்றவற்றை செலுத்தி யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த தங்களது ஒத்து ழைப்பினை வழங்கியுதவுமாறும் யாழ்.மாநகர ஆணையாளர் அறி வித்துள்ளார். (நி)

# குப்பைக்கிடங்கை அகற்றுமாறுகோரி இணுவில் இளைஞர்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான இணுவில் குப்பைக் கிடங்கில் பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டது. இச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு நடைபெற்றது.

இதேவேளை குறித்த பகுதி யில் குப்பைக் கிடங்கை அகற்றக் கோரி அப்பகுதி இளைஞர்கள் நேற்று காலை போராட்டமொ ன்றை முன்னெடுத்தனர்.

இந்த குப்பைக் கிடங்கில் 2 ஆண்டுகளுக்கு முன்னரும் பாரிய தீ பரவியதாக பொலிஸார் தெரி வித்தனர்.

குறித்த இடத்தில் குப்பைகளை கொட்டுவதற்கு அப்பகுதி மக் கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவி த்து வருவதுடன், குப்பை மேட் டுக்கு விஷமிகள் யாராவது தீ வைத்திருக்கலாம் என பொலி ஸார் சந்தேகம் வெளியிட்டுள் ளனர். (நி-33)

# மூவாயிரம் தாதியர்களை சேவையில் இணைக்கத் தீர்மானம்

## அமைச்சர் ரமேஷ்பத்திரன



(கொழும்பு)

புதிதாக மூவாயிரம் தாதி யர்களை சேவையில் இணை த்துக் கொள்ளவுள்ளதாக சுகா தார அமைச்சர் ரமேஷ் பத் திரன நேற்று பாராளுமன்றத் தில் தெரிவித்துள்ளார்.

தாதியர் ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சைகள் நிறை வடைந்துள்ளதாகவும் மேன் முறையீட்டு காலத்தின் பின்னர் ஆட் சேர்ப்பு மேற்கொள்ளப்ப டும் எனவும் அமைச்சர் தெரி வித்தார்.

நாட்டில் 45,000 தாதி யர்கள் சேவையில் இருப்ப தாகவும் பற்றாக்குறை நில வும் இவ்வேளையில் தாதியர் வெற்றிடங்களை அவசரமாக நிரப்புமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ விடுத்த கோரிக்கைக்கு பதி லளிக்கும் போதே சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் உயிரியல் மற்றும் கணிதப் பிரிவில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாண வர்களை ஆட்சேர்ப்பு செய்வ தற்கான வர்த்தமானி வெளி யிடப்பட்டுள்ளதாகவும் தற் போது சுமார் 3100 பேர் ஆட் சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா கவும் மேலும் 3800 பேர் காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுமட்டுவாழ் தெற்கில் காலபோக பதிவுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பினருக்கான காலபோக பதிவுகள், ஏக்கர் வரி மற்றும் சந்தாப்பணம் அறவிடும் செயற்பாடுகள் இன்று புதன்கிழமை இடம்பெறவிருப்பதாக கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தையில் மேற்படி பதிவுகள் இடம்பெற விருப்பதால் கமக்கார அமைப்பிற்குட்பட்ட நெற் செய்கையாளர்கள் உரிய நேரத்தில் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வருகை தரும்போது வயல்களை ஒளிப்படம் எடுத்து கமநலசேவை நிலையத்தில் ஒப்படைத்தமைக்கான குறியீட்டு இலக் கத் தையும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார். (நி-30)


யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

## மணிவிழா வாழ்த்து



திருமதி. புவனேஸ்வரி பரமானந்தம்

பிரதி அதிபர் (யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை)

Dip in Edu, B.A (Hons)

சேவை விபரம்

மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்
1993.01.11-2008.01.22
வ/காத்தார் சின்னக்குளம் அ.த.க பாடசாலை
2008.01.23-2011.04.07
வ/தம்பனைச் சோலை கேதீஸ்வரா வித்தியாலயம்
2011.04.08-2012.10.10
யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை
2012.10.11 இன்றுவரை

எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 08.05.2024 இன்று மணி விழாக் காணும் திருமதி.புவனேஸ்வரி பரமானந்தம் அவர்களை சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்,
றோ.க.த.க.பாடசாலை.

(681)


# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

## ஆதனப் பெயர்மாற்றம்

### 18, தாவளை வீதி, வட்டாரம் -02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02, தாவளை வீதியிலுள்ள இல: 18 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **நாகரத்தினா தையல்நாயகி** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **நாகரத்தினம் அருளாந்தன்** பிரசித்த நொத்தாரிசு க.கணேசானந்தன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 212/27.03.1980 ஆம் இலக்க உறுதியால் **சுப்பிரமணியம் கைம்பெண் சிவபாக்கியமும், நாகரத்தினம் கைம்பெண் தையல்நாயகியும், நாகரத்தினம் சிவானந்தமும், நாகரத்தினம் நித்தியானந்தமும்** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுசொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சிதம்பரப்பிள்ளை தில்லையம்பலம் பெண் கமலாதேவி** ஆகியவர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு இ.பாலேந்திரா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5120/10.02.2003ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகரத்தினம் அருளானந்தன் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த நாகரத்தினம் அருளானந்தன் குறித்த காலப்பகுதியில் கனடாவில் வசித்து வந்திருந்த காரணத்தினால் தனது அற்றோனித்தத்துவக்காரியான புஷ்பகாந்தி சுந்தரேசன் மூலமாகவே குறித்த அறுதி உறுதியினை நிறைவேற்றியுள்ளார்.

குறித்த **சிதம்பரப்பிள்ளை தில்லையம்பலம் பெண் கமலாதேவி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம்** அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சிதம்பரப் பிள்ளை தில்லையம்பலம் பெண் கமலாதேவி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(684)


செல்வம் பொங்கிடும் அட்ஷய திருதியை நன்னாளில்
சகல சௌபாக்கியங்களும் பெற்று தரும் விசேஷ தினத்தில்
எங்களுடன் கொண்டாட பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களை
அகமகிழ்வுடன் அழைக்கின்றோம்.

## மயூரன்ஸ் நகைமாளிகை

அட்ஷய திருதியை தினமாகிய
10.05.2024 அன்று
சிறப்பு விலைக் கழிவுகளும்
பெறுமதிமிக்க பரிசில்களும்
உங்களுக்காக
காத்திருக்கின்றன என்பதை
அறியத் தருவதையிட்டு அக
மகிழ்கிறோம்.




(சி-0304)

இல. 07, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P. 021 222 3015
077 651 0251.


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 150 | 120-160 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 170 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 80 | 60-80 | 100 |
| தக்காளி | 140 | 140 | 150 | 120-160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 100-130 | 140 |
| கோவா | 160 | 180 | 160 | 150 | 200 |
| கரட் | 350 | 250 | 220 | 200 | 240 |
| பூசணி | 80 | 120 | 120 | 80-100 | 80 |
| புடோல் | 100 | 150 | 130 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 60-80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 250 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 280 | 300 | 300 | 220 | 250 |
| பாகற்காய் | 300 | 400 | 400 | 250 | 400 |
| வெண்டக்காய் | 80 | 150 | 100 | 130-180 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | -- | 150 |
| பயற்றங்காய் | 200 | 150 | 200 | 130-180 | 120 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 300 | 320 |
| பீற்றூட் | 200 | 200 | 280 | 200 | 300 |
| கறிமிளகாய் | 150 | 200 | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 500 | 300-500 | 600 |
| போஞ்சி | 200 | 400 | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 150 | -- | 140 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 40-60 | 100 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1200 | 820-1200 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 40-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 350 | -- | 80 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 200 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 60 | 180 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 120 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பிரித்தானியா மீது தாக்குதல் உறுதி

### மிரட்டும் ரஷ்யா

(மொஸ்கோ)

பிரித்தானியாவின் ஆயுதங்களை பயன்படுத்தி உக்ரைன் தாக்குதல் நடத்தினால் பிரித்தானியா பாரிய விளைவுகளை சந்திக்கும் என ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ரஷ்யாவை தாக்க, பிரித்தானிய ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு உக்ரைனுக்கு உரிமை உண்டு என கடந்த வாரம் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் கேமரூன் கூறியிருந்தார்.

இதனையடுத்தே, பிரித்தானிய மீது தாக்குதல் உறுதி என ரஷ்யா மிரட்டல் விடுத்துள்ளது.

மேலும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், ரஷ்ய வெளிவிவகார அமைச்சகத்திற்கு பிரித்தானிய தூதர் நைஜல் கேசி அழைக்கப்பட்டதாகவும் ரஷ்யா கூறியுள்ளது.

தூதர் நைஜல் கேசியின் அழைப்புக்கு மறுப்பு தெரிவித்துள்ள பிரித்தானியா, ரஷ்ய அதிகாரிகளுடன் உத்தியோகப்பூர்வ சந்திப்புக்களை மட்டுமே நைஜல் கேசி முன்னெடுத்துள்ளதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

மேலும் ரஷ்யாவுக்கு எதிராக பிரித்தானியாவின் தொலைதூர ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தாது என்ற நிலைப்பாட்டுக்கு எதிராக பிரித்தானியா செயற்படுவதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனுடன் பிரித்தானியாவும் தற்போது போரில் களமிறங்கியுள்ளதை பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் கேமரூன் உறுதி செய்துள்ளதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், வெளிவிவகார அமைச்சர் டேவிட் கேமரூன் கூறிய கருத்துகள் இந்த போரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதாகவே கருதப்படும் என்றும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. (நி)

## இஸ்ரேலின் தரைவ

## பாரிய உயிராபத்துக்

### ஐ.நா செயலாளர்

(ஜெனீவா)

**இஸ்ரேல் முன்னெடுக்கவுள்ள இராணுவ நடவடி விளைவுகளையும் உயிராபத்துக்களையும் ஏற் ஐ.நாவின் பொதுச்செயலாளர் அன்டோனியோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அத்துடன், இஸ்ரேலின் அமைச்சரவை அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி, காசா நகரத்தின் மீது திட்டமிட்ட படையெடுப்பை முன்னெடுப்பதற்கு ஏகமனதாக வாக்களித்தமை பாரிய உயிரிழப்புகளை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஹமாஸின் போர் நிறுத்த வாய்ப்பை நிராகரித்து, 100,000 மக்களை வெளியேற உத்தரவிட்டு தெற்கு காசா நகரத்திற்குள் தமது இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

மேலும், குறித்த நடவடிக்கையின் நோக்கம், பணயக்கைதிகளை விடுவிப்பதில் முன்னேற்றம் மற்றும் பிற போர் நோக்கங்களுடன், ஹமாஸ் மீது இராணுவ அழுத்தத்தை பிரயோகிப்பதே ஆகும் என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஹமாஸின் சமீபத்திய போர்நிறுத்தம் "இஸ்ரேலின் எதிர்பார்ப்புக் கோரிக்கைகளிலிருந்து வெகு தொலைவில் உள்ளது" என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐ.நா பொதுச்

## அணு ஆயுத பயிற்சிக்கு புடின் உத்தரவு மேற்கத்திய நாடுகள் கலக்கத்தில்

(மொஸ்கோ)

உக்ரைன் அருகே அணு ஆயுத பயிற்சிகளை நடத்த ரஷ்ய இராணுவத்திற்கு ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சு நேற்று திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

"பயிற்சியின் போது, மூலோபாயமற்ற அணு ஆயுதங்களை தயாரிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த பயிற்சிகள் எதிர்காலத்தில் நடைபெறும் என்றும், மேற்கத்திய நாடுகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் ரஷ்யாவின் பிராந்திய ஒருமைப்பாட்டை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது என்றும் அமைச்சகம் கூறியுள்ளது. (நி)



விமானம் மற்றும் கடற்படைப் படைகளும், உக்ரைனின் எல்லையை ஒட்டிய மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரைனியப் பகுதிகளை உள்ளடக்கிய தெற்கு இராணுவ மாவட்டத்தைச் சேர்ந்த துருப்புகளும் இதில் கலந்துகொள்ளும்.

ரஷ்ய ஜனாதிபதியின் இந்த அறிவிப்பால் மேற்கத்திய அதிகாரிகள் பெருகிய முறையில் பீதியடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஆண்டு ரஷ்யா விரிவான அணுசக்தி சோதனை தடை ஒப்பந்தத்தின் ஒப்புதலை கைவிட்டதுடன் அமெரிக்காவுடனான முக்கிய ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் இருந்தும் விலகியது.

அத்துடன், கடந்த பெப்ரவரி மாதம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அணுஆயுதப் போரின் ஆபத்து இருப்பதாக புடின் எச்சரித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## இஸ்ரேலிய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் ரஃபா எல்லை

### மனிதாபிமான உதவிகள் இடைநிறுத்தம்



(காசா)

காசா பகுதியில் உள்ள ரஃபா எல்லையை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

ரஃபா மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்பதுடன் எகிப்திலிருந்து காசாவிற்கான மனிதாபிமான உதவிகள் வருவதற்கான ஒரேயொரு பாதையாகவும் காணப்படுகின்றது.

ரஃபாவின் காசா பக்கத்தினை நாங்கள் தற்போது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளோம் எங்களது சிறப்பு படைகள் இந்த பகுதியில் சோதனை நடவடிக்கைகள் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளன என இஸ்ரேலின் இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காசா எல்லை அதிகாரசபைக்கான பேச்சாளர் இஸ்ரேலிய டாங்கிகள் காணப்படுவதை உறுதி செய்துள்ளார்.

அந்த பகுதி ஊடாக மனிதாபிமான உதவிகள் பயணிப்பது நிறுத்தப்பட்டுள்ளதாக மனிதாபிமான அமைப்புகள் தெரிவித்துள்ளன. (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...வழிப் படையெடுப்பு ...க்களை ஏற்படுத்தும்

## ...ர் கடும் எச்சரிக்கை

...டவடிக்கை பாரிய ... ஏற்படுத்துமென ...னியோ குட்டரெஸ்,



செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ், இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள அப்பாவி மக்களது துன்பங்களை நிறுத்துவதற்கு இருதரப்பினரும் உடனடியாகவே பொது உடன்படிக்கைக்குச் செல்ல வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார்.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தினைத் இருதரப்பினரும் தவற விடாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன், ரஃபாவில் தரைவழிப் படையெடுப்பொன்றினை முன்னெடுப்பதானது தீர்வாகாது எனவும் அவர் வலியுறுத்தியுள் ளார்.

எனினும் குறித்த தரைவழிப் படையெடுப்பு முன்னெடுக்கப்படுமானால் பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பதுடன், அது பிராந்தியத்தினைச் சீர்குலைக்கும் சகிக்க முடியாத விடயமாகவும் இருக்கும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி)

# கடும் வெப்ப அலையால்

## பங்களாதேஷில் 15 பேர் பலி

(டாக்கா)

இந்தியாவின் அண்டை நாடான பங்களாதேஷிலும் கடுமையான வெயில் கொளுத்தி வருகிறது. இதன் காரணமாக வெப்பம் அலை வீசுவதால் மக்கள் வெளியில் நடமாடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை கடுமையான வெப்ப அலை வீசுகிறது.

கடந்த இரண்டு வாரங்களில் வெப்பம் தாங்க முடியாமல் 15 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டின் சுகாதார மையம் தெரிவித்துள்ளது.

வெப்ப அலை காரணமாக பள்ளிகள், கல்லூரிகள், மதராஸ், தொழிநுட்ப கல்வி நிறுவனங்கள் என அனைத்திற்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளன.

சீரற்ற மழை மற்றும் அதிக வெப்பநிலை காரணமாக வரும் ஆண்டுகளிலும் பங்களாதேஷில் அதிக வெப்ப அலை வீசும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (நி)

# சீனாவில் கத்திக்குத்து

## இருவர் உயிரிழப்பு 23 பேர் காயம்

0

தென்மேற்கு சீனாவில் உள்ள மருத்துவமனையில் கத்திக்குத்து தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 23 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுனான் மாகாணத்தில் உள்ள Zhenxiong மக்கள் மருத்துவமனையில் இந்த கத்திக்குத்து சம்பவம் நடந்ததாக சீன அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் குறைந்தது 23 பேர் காயமடைந்துள்ளதாகவும், ஆனால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை அந்நாட்டு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தொழில்நுட்ப கோளாறு

## விண்வெளி பயணம் ஒத்திவைப்பு

(டில்லி)

இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ் 3 ஆவது முறையாக விண்வெளிக்கு செல்ல இருந்த பயணம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கடைசி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் இந்நிலையில் அந்நாட்டின் போயிங் நிறுவனம் "ஸ்டார்லைனர்" என்ற விண்வெளி ஓடத்தை உருவாக்கி வருகிறது.

இந்த ஓடம் சோதனை முறையில் இந்திய நேரப்படி நேற்று காலை 8.04 மணிக்கு "அட்லஸ் வி' ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட இருந்தது.

இதில் சுனிதா வில்லியம்ஸுடன், பேரி வில்மோரும் விண்வெளிக்கு செல்லவிருந்தார். புளோரிடா மாகாணத்தின் கேப் கனாவெரல் ஏவுதளத்திலிருந்து ஸ்டார்லைனர் விண்கலம் ஏவப்பட இருந்த 90 நிமிடங்களுக்கு முன்பு, "அட்லஸ் வி' ரொக்கெட் ஏவுதல் தொழில்நுட்ப கோளாறு காரணமாக திடீரென நிறுத்தப்பட்டது.

ஆக்ஸிஜன் ரீலீஃப் வால்வில் பாதிப்பு ஏற்பட்டதன் காரணமாக இந்த பயணம் ஒத்திவைக்க வழிவகுத்தது என அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா தெரிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து சுனிதா வில்லியம்ஸ், பேரி வில்மோர் ஆகியோர் விண்கலத்தில் இருந்து பாதுகாப்பாக வெளியேறினர்.

சுனிதா வில்லியம்ஸ் ஏற்கெனவே இரண்டு முறை (2006, 2012) விண்வெளி பயணம் மேற்கொண்டிருந்த நிலையில், தற்போது 3 ஆவது முறையாக பயணம் செய்ய இருந்தார். சுனிதா வில்லியம்ஸ் இதுவரை விண்வெளியில் 322 நாட்கள் தங்கியிருந்து ஆய்வு மேற்கொண்ட சாதனையை கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# இடிந்து விழுந்தது ஐந்து மாடிக்கட்டடம்

## 50 இற்கும் மேற்பட்டவர்கள் இடிபாடுகளுக்குள்

## தென்னாபிரிக்காவில் துயரம்

(தென்ஆபிரிக்கா)

தென் ஆபிரிக்காவில் ஐந்து மாடிக்கட்டடம் இடிந்து விழுந்ததில் இருவர் பலியாகியுள்ள அதேவேளை சுமார் 55 பேர் கட்டட இடிபாடுகளிற்குள் சிக்குண்டுள்ளனர்.

வெஸ்டேர்ன் கேப் மாகாணத்தின் ஜோர்ஜியாவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

22பேர் இடிபாடுகளிற்குள் இருந்து மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டடம் இடிந்து விழுந்த வேளை கட்டடத்திற்குள் சுமார் 75 பேர் காணப்பட்டனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன. மீட்கப்பட்ட 22 பேரில்



இருவர் பின்னர் காயங்கள் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

இடிபாடுகளிற்குள் சிக்குண்டுள்ளவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்ணுயிர்க்கொல்லி தடுப்பு மருந்துகளினால் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியில்




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம் மினிய உறவுகளே!**

எமது அவசிய தேவை கருதி நுண்ணுயிர்க் கொல்லி தடுப்பு (Anti - Microbial Resistance - AMR) இரசாயனங்களின் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கிய நாளிலிருந்து அவற்றின் பயன்பாடும் எதிர்பார்த்த அளவைவிட அதிகரித்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது. பலதேவைகளுக்காக நுண்ணுயிர்க்கொல்லி (Antibiotics) பதார்த்தங்கள் சந்தையில் பெருமளவில் புழக்கத்திற்கு வந்திருக்கின்றன. அவற்றின் பயன்பாடு தற்காலத்தில் மிகவும் அதிகமாக இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் நாம் எதிர்பார்த்த. அடைய எத்தனிக்கின்ற இலக்கான உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகவே இன்னமும் இருக்கின்றது.

நுண்ணுயிர்க்கொல்லி தடுப்பு என்பது நுண்ணுயிரிகள் அவற்றுக்கெதிராக அவற்றை கொல்லவோ அல்லது தடுக்கவோ பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு எதிராக தமக்குள்ளே உருவாக்கும் தம்மை தப்பித்துக் கொள்ள வைக்கும் அல்லது அதற்கெதிராக செயற்படும் பொறிமுறையாகும். இதன் மூலம் தொடர்ச்சியாக நாம் பயன்படுத்தும் நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள் நீண்ட கால பாவனையில் அவற்றுக்கெதிராக சக்தியற்றவையாக மாறிவிடும். இதற்கு நுண்ணங்கிகளில் காணப்படும் தப்பிப் பிழைத்தல் பொறிமுறை ஒரு காரணமாகும். இதில் ஆச்சரியப்பட வைக்கும் செய்தி என்னவெனில் வழக்கமாகநாம்



தொற்றுநோய்களுக்கான காரணிகளான பற்றீறியா, பங்கசு, வைரசு மற்றும் புரட்டசோவன்கள் போன்றனவற்றுக்கெதிராக பயன்படுத்தும் மருந்துகளாகும்.

நுண்ணுயிர் கொல்லிகளை எதிர்க்கும் திறன் நுண்ணுயிரிகளுக்கு வரத்தொடங்கினால் வழக்கமாக எமக்கு வழங்கப்படும் நோய்களைக் கட்டுப்படுத்தும் பரிந்துரைகள் அல்லது நிவாரணங்கள் எதுவும் செயற்படமாட்டாது. மாறாக அவை முற்று முழுதாக மலினப்படுத்தப்பட்டுவிடும். இதன் மூலம் அவ்வாறான மருந்துகளை நாம் பரிந்துரைத்தபடி பயன்படுத்தினாலும் அவை எமக்கான சாதாரண நோயை கூட மாற்றும் சக்தியிழந்துவிடும். இதன் விளைவாக மனித குலத்திலே இழப்புக்களும் இவை தவிர தாவரங்களை இன்னும் கால்நடைகளை இழக்கவும் நேரிடும்.

விவசாயத்தில் இதன் மூலம் உற்பத்தியிழப்பு, வாழ்வாதார பாதிப்பு, இவற்றுடன் சுற்றுச்சூழல் பாதிப்பு என்பன ஏற்படவும் இதன் மூலம் உணவுச் சங்கிலியில் தொற்று ஏற்படவும் வாய்ப்புக்களுண்டு. ஒவ்வொருமுறையும் நுண்ணுயிர்க் கொல்லிகளை பயன்படுத்தும் போது அவற்றுக்கெதிராக எமக்குத் தெரியாமலேயே நுண்ணுயிரிகளில் எதிர்ப்புசக்தி உருவாகி விடுகின்றது. இதனால் நாம் பயன்படுத்தும் நுண்ணயிர்க் கொல்லி மருந்துகள் எதுவுமே இறுதியில் பயனற்றதாகிவிடும். இதில் பலர் மருத்துவர்களின் பரிந்துரைகளை அலட்சியம் செய்து தாமே ஒரே நுண்ணுயிர்க் கொல்லிகளை தொடர்ந்தும் பயன்படுத்துகின்றனர். இது தவறான அணுகுமுறையாகும். முறைப்படி மருத்துவரிடம் ஆலோசனை பெற்றே நுண்ணுயிர்க்கொல்லிகளை பயன்படுத்துதல் மிகவும் அவசியமானதாகும். நுண்ணுயிர்க்கொல்லி ஏதிர்க்கும் திறன் என்பது உலகளாவிய பிரச்சினையாகும். குறிப்பாக மனிதனிரும் விலங்குகளிலும் இந்தப் பிரச்சனை பூதாகாரமானதாக உருவெடுத்திருக்கின்றது. இதன் மூலம் உணவுப் பாதுகாப்பு நடைமுறைகளிலும் மில்லியன் கணக்கான விவசாய பெருமக்களின் வாழ்வாதாரத்தினைப் பாதிக்கும் நிலைக்கு வந்திருப்பதாக உலக உணவு தாபன அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இங்கே நுண்ணுயிர்க் கொல்லிகளை தாவர மற்றும் விலங்கு உற்பத்தியில் பயன்படுத்துவதில் பல காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

1. சூழலை மாற்றியமைப்பதன் வாயிலாகவும் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதனாலும் ஊட்டச்சத்து மற்றும் கால்நடை முகாமைத்துவத்தை சிறப்பாக பேணுவதனாலும் நோய்களை வருமுன் தடுக்க முடியுமான நேரங்களில் நுண்ணுயிர்க் கொல்லிகளை தேவையற்று பயன்படுத்தல்

2. தாவரமற்றும் விலங்கு நோய் விற்பன்னர்களுக்கான தட்டுப்பாடு மற்றும் இவ்வாறான விற்பன்னர்களுக்கு தேவையான அவ்சியமான பயிற்சிகள் வழங்கப்படாமை

3. நுண்ணுயிர்க்கொல்லிகளை தவறாக உற்பத்தி மற்றும் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் மருந்துகளாக கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு பயன்படுத்துதல்

4. நுண்ணுயிர்கொல்லி மருந்துகளை முறையான சிபார்சினடிப்படையில் மக்களுக்கு கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தல். மருந்தகங்கள் இது விடயத்தில் இன்னும் சிறப்பான நடைமுறையைக் கடைப்பிடித்தல்.

5. இணைய வழி மூலமாக நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள் கிடைக்கின்றமையும் அவற்றை பலரும் வாங்கி அது பற்றிய அறிவின்றி பயன்படுத்துதலும்.

6. முறையற்ற, திறனற்ற மிகவும் மலிவான நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள் கிடைக்கின்ற தன்மையால் இதனை பலரும் இலகுவில் வாங்கிபயன்படுத்தும்தன்மை.

7. அதிகளவிலான பயன் பாடும் அதனால் அந்த நுண்ணுயிர்க்கொல்லிகள் பயனற்றுப் போவதும்

8. இவையெல்லாவற்றையும் விட எமது கலாசாரமும் அரசியல் ஆதாயமும் பொருளாதார நெருக்கடியும் நுண்ணுயிர்க்கொல்லிகளை முறையாக பயன்படுத்தவிடாமை. எதற்கும் காசு,பணம் எனஅலைகின்ற கூட்டம் இந்த விடயத்தில் தமது கைங்கரியத்தை காட்டுவதனால் இந்த நெருக்கடியிலிருந்து மீளமுடியாதிருக்கின்றமை.

விவசாயத்தில் நுண்ணுயிர்க்கொல்லிகளின் பயன்பாடு அதிகரித்திருக்கின்றமைக்கு தாவரங்களில் குறிப்பாக விலங்குகளில் ஏற்படும் நோய்கள் முக்கிய காரணமாகும். அதிலும் உணவாக பயன்படும் பொருட்களை தரும் விலங்குகளில் பயன்படுத்தும் நுண்ணுயிர்க் கொல்லிகளின் தாக்கம் மிகவும் அதிகமானது. விலங்குகளை நோய்களிலிருந்து காப்பாற்றுவதற்காக பயன்படுத்தும் இவ்வகைமருந்துகள் இறுதியில் மனிதனுக்கு எமனாக மாறும் நிலையையும் நாம் காணமுடிகின்றது. சிபார்சு செய்யப்பட்ட அளவில் பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு பதிலாக குறிப்பாக நோய் வராமல் தடுக்கும் மருந்துகளுக்கு பதிலாக அதிகளவில் பயன்படுத்தும் மருந்துகளால் பாதிப்புஅதிகமே.

மீன்களுக்கு வழங்கப்படும் 70-80 சதவீதமான நுண்ணுயிர்க்கொல்லிகள் நீரிலேயே விடப்படுவதனால் அவை நீர்நிலைகளில் பரவுகின்றன. கால்நடைகளுக்கு பயன்படுத்தப்படும் 75-90 சதவீதமான நுண்ணுயிர்க் கொல்லிகள் சமிபாடடையாமலேயே வெளி விடப்படுவதனால் கழிவுத்தொகுதியில் நிரப்பப்படுகின்றன. 2010 இல் கால்நடைகளுக்கு பயன்படுத்தப்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிகளின் அளவு 63,151 தொன்கள் இந்த நிலைமை 2030இல் 67சதவீதம் உயர்ந்து 105,596 தொன்களாகமாறிவிடும். ஆக மொத்தத்தில் நுண்ணுயிர்க்கொல்லிகளின் முறையற்ற பாவனையை தவிர்த்து உணவுப் பாதுகாப்பிற்கு இடர் ஏற்படுத்தாதிருப்பது அனைவரின் நல்வாழ்வுக்கும் உறுதுணையாகும்.

# இன்று ஒரு தகவல் 117



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## திருட்டுப்புத்தி

"சார்! இன்றைக்கு எங்க வீட்டிலே உங்களுக்கு சாப்பாடு!" என்று ஒருத்தர் சொன்னார்."அப்படியா ரொம்ப சந்தோஷம்! அவசியம் வந்துவிடுகிறேன்!" என்றார் இன்னொருத்தர்."என்னங்க இது? அந்த ஆள் கூப்பிட்டார் என்று உடனே ஒத்துக்கொண்டீர்கள்?" என்று இவரிடம் கேட்டார் இன்னொருத்தர்."ஏன்...ஏன் அப்படி சொல்கிறீர்கள்?" என்றார் அவர். "அதற்கில்லை.அந்த ஆள் நல்லவர் இல்லை..." என்றார்."அவர் நல்லவர் இல்லை என்றால் அதைப்பற்றி நமக்கு என்ன? அவர்கள் வீட்டிலே சாப்பாடு நல்லா இருக்கும்... அது போதுமே நமக்கு!" என்றார்."கூப்பிடுவது யாராக இருந்தா என்ன...சாப்பிடுவது நல்லா இருந்தால் போதும்!"என்கிற கொள்கை உடையவர் அவர். இது ஒரு நல்ல கொள்கை இல்லை! ரொம்ப காலத்திற்கு முன்பு துறவி ஒருவர் இருந்தார். ஊர் ஊராக சுற்றிக் கொண்டு இருந்தார்.

ஒரு நாள் ஒரு ஊருக்கு போனார். அந்த ஊரிலே ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அவர் இந்த துறவியிடம் வந்து ஐயா! நீங்க இன்னைறக்கு எங்கள் வீட்டிலே சாப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்கென்ன சாப்பிட்டால் போய்ச்சு என்று துறவியும் சம்மதம் கொடுத்து விட்டார். அன்றைக்கு அந்த பணக்காரர் வீட்டிலே இந்த சாமியாருக்கு சாப்பாடு! இவரை உட்கார வைத்து ரொம்ப பணிவாக விருந்து பரிமாறினார்கள். வெள்ளிக் கூஜாவிலே தண்ணீர் கொண்டு வந்து வைத்தார்கள். துறவி சாப்பாட்டை முடிக் கட்டிக் கொண்டு தான் தங்கியிருந்த மடத்திற்கு வந்து சேர்ந்தார். அதன் பின்பு சாவகாசமாக தன்னுடைய துணிப்பையை பிரித்தார். அவருக்கு திடுக் என்று தூக்கிப் போட்டது! என்ன காரணம்? அவர் சாப்பிட்ட இடத்திலே இருந்த வெள்ளிக் கூஜா இவருடைய பைக்குள்ளே இருக்கிறது. ஐயையோ... ஏதோ ஞாபகத்திலே இதை திருடிக்கொண்டு வந்து விட்டோமே! என்று நினைத்து மிகவும் வருத்தப்பட்டார். இது எப்படி நடந்து இருக்கும்? என்று யோசித்தார். உடனே புறப்பட்டு அந்த பணக்காரர் வீட்டுக்கு போனார்.

ஐயா! உங்களுக்கு இவ்வளவு செல்வம் எப்படி வந்தது என்று சொல்ல முடியுமா? என்று கேட்டார். அங்கேயும் இங்கேயும் பார்த்து விட்டு பணக்காரர் சொல்ல ஆரம்பித்தார். சுவாமி உங்களை மாதிரி உள்ள துறவிகளிடம் உண்மையை சொல்லுவதிலே ஒன்றும் தப்பில்லை என்று நினைக்கிறேன். நான் ஒரு காலத்திலே பணம் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். ஒரு நாள் ஒருவருடைய காசுப்பையை திருடினேன். அதிலே ஆயிரம் ரூபாய் இருந்தது. அந்த ஆயிரம் ரூபாயை மூலதனமாக வைத்தேன் இவ்வளவு பணமும் சேர்த்தேன் இருந்தாலும் இப்பவும் அந்த திருட்டு என்னை உறுத்திக்கொண்டு தான் இருக்கிறது என்றார். உடனே துறவி சொன்னார்.

நீங்கள் திருடி சம்பாதித்த பணத்திலேயிருந்து எனக்கு சாப்பாடு போட்டீர்கள். அந்த சாப்பாட்டை சாப்பிட்டதும் எனக்கும் திருட்டுப் புத்தி வந்துவிட்டது. இந்தாருங்கள் உங்கள் வெள்ளிக்கூஜா என்று சொல்லி அதை திருப்பிக் கொடுத்தார். இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன என்றால்... உணவு எப்படி? என்பதை விட உள்ளம் எப்படி என்பது முக்கியம். அது ஒரு பக்கம்.

சில பேர் இலட்சம் வாங்குவார்கள் அல்லது திருடுவார்கள். செய்வது தப்பு என்று அவங்களுக்கே நன்றாகப் புரியும். இருந்தாலும் விட முடியவில்லை. தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக் கொள்ளுவார்கள். நாம தான் இப்படி இருந்து விட்டோம். நமது பிள்ளைகளுக்காவது இந்தப் பழக்கம் வாராமல் இருக்க வேண்டும் என்று உறுதியாக இருப்பார்கள்.

அது எப்படி முடியும்? திருடினவர் போட்ட சாப்பாடே அடுத்தவர் புத்தியை மாற்றுகிறது என்றால் அவரோட சொந்த பிள்ளைகளுக்கு புத்தி எப்படி இருக்கும். ஒரு திருடன் தன்னுடைய பிள்ளை யோக்கியனாக இருக்க வேண்டும் என்று நினைத்தான். அதனாலே பிள்ளையை கூப்பிட்டு உட்கார வைத்து போதனை எல்லாம் செய்தான். நீதி போதனை! இதோ பாருப்பா நான் சொல்வதை நன்றாகக் கவனி உன்னை மாதிரி ஒரு சின்னப் பையன் ஒரு பெரியவரிடமிருந்து தெரியாமல் கைப்பையைத் திருடி விட்டான். அந்த கைப்பையிலே பறி கொடுத்தவர் விலாசமும் 15 ரூபா பணமும் இருந்தது. அவன் மனம் திருந்தி அந்தப் பணத்தை திருப்பிக் கொண்டு போய் அவரிடம் கொடுத்து விட்டேன்.

அந்த ஆள் பையனுடைய நேர்மையைப் பராரட்டி 5 ரூபாய் பரிசாக கொடுத்தார். இதிலிருந்து நீ என்ன புரிந்து கொண்டாய்? என்றார் அப்பா!

அந்தப் பையனுக்கு 10 ரூபா நஷ்டம் என்று புரிந்து கொண்டேன்! என்றான் பையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கைச் சங்கீத சபை

**பரீட்சைகள் - 2024**

வட இலங்கைச் சங்கீத சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான **1, 2, 3, 4, 5, 6** ஆகிய தரங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் மற்றும் அறிமுறைப் பரீட்சைகளுக்குரிய நேரசூசி, அனுமதி அட்டைகள் யாவும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பரீட்சைகள் யாவும் கீழ் குறிப்பிடப்படும் தினங்களில் நடைபெறும்.

**செயன்முறைப் பரீட்சைகள் - மே மாதம் 18, 19, 23, 24, 25, 26 ஆம் திகதிகள்**

**அறிமுறைப் பரீட்சைகள் - யூன் மாதம் 08, 09 ஆம் திகதிகள்**

**குறிப்பு** : தரம் 5, 6 (பரதம், சங்கீதம்) கொழும்பு மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சைகள் யூன் 15 திகதி முதல் நடைபெறும்.

**பொ.ரவிச்சந்திரன்**
**தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை**
**மருதனார்மடம்-சுன்னாகம்** (சி-0303)


# மாவட்ட செயலக அணிகளுக்கு இடையிலான கயிறு இழுத்தல் போட்டி

## யாழ்.மாவட்ட அணி சம்பியன்



வடமாகாண விளையாட்டு திணைக்களம் நடத்தும் மாவட்ட செயலக அணிகளுக்கிடையிலான கயிறு இழுத்தல் போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ் மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகத்திற்கு உட்பட்ட அணிகளுக்கிடையிலான ஆண் கள், பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா யங்ஸ்ரார் மைதானத்தில் நடைபெற்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. முதல் சுற்றில் இரு அணிகளும் சம பலத்துடன் மோதினர். இதனால் இரு அணிகளுக்கும் இடை யில் பலத்த போட்டி நிலவியது.

யாழ் மாவட்ட அணி அபாரமான திறமையை வெளிக்காட்டி வெற்றி பெற்று சம்பியன் கிண் ணத்தை சுவீ கரித்துக் கொண்டது. (நி-90)

# அனுமதியற்ற பகுதியில் மணல் ஏற்றிய ஆறு டிப்பர் சாரதிகள் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ்பிரிவு க்கு உட்பட்ட கல்லாறுப் பகுதி யில் நேற்று முன்தினம் திங் கட்கிழமை சிறப்பு அதிரடிப் படையினரின் சுற்றி வளைப்பின் மூலம் அனுமதிக்கப்படாத பகுதியில் மணல் ஏற்றிப் பயணித்த ஆறு டிப்பர்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டு விசாரனைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் சந்தேக நபர்கள் விடுவிக்க ப்பட்டுள்ளதுடன் தடையப் பொருட்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடு க்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-316)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3110


**செறின்**

சிங்கப்பூர் எதுக்கு வந்திங்கள்?
வாங்கின கடனை அடைக்கத்தான்.
கடன் எதுக்கு வாங்கினிங்கள்?
சிங்கப்பூர் வராதுக்குத் தான்.



**வெனிகின்**

சும்மா சும்மா யாரும் ICE WATER
எடுக்க வேண்டாம்



குடிச்சிட்டு குடிச்சிட்டு போயிடுவிங்கள்
கடைசியில நான் தண்ணீர் புடிச்சு வைக்கனும்

**நிசாந்தினி**

உன் பொண்டாட்டி கிட்ட ஏதும் சொன்னியா
ஆமாம் குழம்பு அம்மில அரைச்சு
வைக்கச் சொன்னான்



அந்த கொடுமையை நீயே போய் பாரு
குழம்பை ஊத்தி அம்மியில போட்டு அரைக்குது

**சாம்**

நல்லவனுக்கும் கெட்டவனுக்கும்
இருக்கின்ற சிறு வித்தியாசம் இது தான்.



அடுத்தவன் பேச்சைக் கேட்டு நடந்தால்
நல்லவன்... அவனாக சுயமாக சிந்தித்து
நடந்தால் கெட்டவன்...

**பெனிற்றா**

வீட்டில இருந்தால் பொண்டாட்டி கொடுமை
வெளிய போனால் வெய்யில் கொடுமை



வேலைக்கு போனால் ஓனர் கொடுமை
ஒரு மனுஷன் என்ன தான் செய்ய முடியும்

**கஜேந்திரா**

நீ ஒரு படகில் செல்வதாக கற்பனை செய்துகொள்



கடலின் நடுவே சுறா மீன்களுக்கிடையே மாட்டிக்
கொண்டாய். இப்பொழுது தப்பிக்க என்ன செய்வாய்?
கற்பனை செய்வதை நிறுத்தி விடுவேன் மன்னா

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 475





ரவிதாஸனையும் தேவராளனையும் மற்ற நாலு அராபியர்களும் தாக்கி நெருக்கிக் கொண்டிருந்தார்கள். நெருக்கப்பட்டவர்களின் நிலை நெருக்கடியான கட்டத்தை அடைந்திருந்தது. வந்தியத்தேவன் பெருங் கூச்சல் போட்டுக் கொண்டு ஓடினான். அராபியர்களில் ஒருவன் திரும்பி அவனைத் தாக்க வந்தான். வந்தியத் தேவனுடைய கத்தி அராபியனுடைய கத்தியைத் தாக்கி அது கடலில் போய் விழச் செய்தது. அராபியனுடைய முகத்தில் ஒரு வெட்டுக் காயத்தையும் உண்டாக்கிற்று. இரத்தம் வழிந்த பயங்கர முகத்தையுடைய அராபியன் கை முட்டியை ஓங்கிக்கொண்டு வந்தியத் தேவனுடைய மார்பில் குத்த வந்தான். வந்தியத்தேவன் சிறிது நகர்ந்து கொண்டான். அராபியன் தடாலென்று விழுந்தான். அவன் விழுந்த வேகத்தினால் இடம் பெயர்ந்த பாய்மரக் குறுக்குக் கட்டை ஒன்று அவன் தலையில் படார் என்று விழுந்தது. இன்னொரு அராபியனோடு வந்தியத்தேவன் சிறிது நேரம் துவந்த யுத்தம் செய்து அவனைக் கடலில் தள்ளினான்.

மந்திரவாதி ரவிதாஸனும், தேவராளனும், போர்த்திறமை வாய்ந்தவர்கள் அல்ல. ஆகையால் அராபியர் இருவருடன் தனித்தனி சண்டை போடுவதே அவர்களுக்குக் கஷ்டமாயிருந்தது. நேரமாக ஆகக் களைப்படைந்து வந்தார்கள். அச்சமயம் கடலில் ஏதோ விழுந்த சப்தம் கேட்டு அராபியர் இருவரும் தங்கள் தோழர்களின் கதி என்னவோ என்று திரும்பிப் பார்த்தார்கள். அதுதான் சமயம் என்று ரவிதாஸனும் தேவராளனும் அவர்களைத் தீர்த்துக் கட்டினார்கள்.

எல்லாம் முடிந்ததும் வெற்றி பெற்ற மூவரும் இளைப்பாற உட்கார்ந்தார்கள். "அப்பனே! நல்ல சமயத்தில் வந்தாய்! எப்படி வந்தாய்?" என்று கேட்டான் ரவிதாஸன்.

"நீ ஏதோ மந்திரம் போட்டாய் போலிருக்கிறது. என்னைக் கட்டியிருந்த கட்டுக்கள் தாமாகவே அவிழ்ந்து கொண்டன. கையில் இந்தக் கத்தி வந்து ஏறியது!" என்றான் வந்தியத்தேவன்.

"உன் தாகம் என்ன ஆயிற்று?"

"தேங்காய் ஒன்று என் தலைக்கு மேலாக வந்தது. அதுவாக உடைத்துக்கொண்டு என் வாயில் கொஞ்சம் இளநீரை ஊற்றியது!"

"ஓகோ! நீ வெகு பொல்லாதவன்!" என்றான் தேவராளன். இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"தம்பி! உன்னைப் பரிசோதித்தோம், வேண்டுமென்றே உன் கட்டுக்களைத் தளர்த்தி விட்டிருந்தோம். ஆயுதங்களைப் பக்கத்தில் வைத்திருந்தோம், தேங்காய்களை உனக்குத் தெரியும்படி போட்டிருந்தோம்!" என்றான் ரவிதாஸன்.

இவையெல்லாம் பொய்யா, உண்மையா என்று வந்தியத்தேவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. சற்று மௌனமாகயிருந்தான்.

"அப்பனே! யோசித்துச் சொல்! நீ உயிர் பிழைக்க வேண்டுமா? பிழைத்துக் கரை சேர்ந்து உன் உற்றார் உறவினர் முகத்தைப் பார்க்க வேண்டுமா? பொருளும் போகமும், பதவியும் பட்டமும் பெற்று வாழ வேண்டுமா? விருப்பமிருந்தால் சொல் எங்களுடன் சேர்ந்துவிடு! இவ்வளவு நலங்களையும் அடையலாம்!" என்றான் ரவிதாஸன்.

"தூங்கிக் கொண்டிருந்த மனிதர்களைக் கொன்றீர்கள் அல்லவா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இரண்டு பேரைத்தான் கொல்ல முடிந்தது. மற்றவன் விழித்துக்கொண்டான். நீ முன்னமே எங்களுடன் சேர்ந்திருந்தால், இன்னும் சிறிது சுலபமாய்ப் போயிருக்கும்." "தூங்கிக் கொண்டிருப்பவர்களைக் கொல்லுகிறது எந்த தர்மத்தில் சேர்ந்தது? அவ்விதம் செய்ய எப்படி உங்களுக்கு மனம் வந்தது?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## லட்சுமி கடாட்சம்!

(நேற்றைய தொடர்ச்சி..)

இந்த விடயத்தை அறிந்த நாட்டு மக்கள், முனிவரை தெய்வமாகவே பாவித்தனர்.

ஒரு நாள் அரசன் தன்னுடைய முக்கிய பரிவாரங்களுடன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். ஒரு மானை துரத்தி கொண்டு ஓடினார் மன்னன். அவன் பின்னாலே சென்றார் முனிவர்.

மான் தப்பிவிட்டது. களைத்து போன மன்னனும், முனிவரும் ஒரு மரத்தடியில் அமர்ந்தனர். முனிவரது மடியில் சற்று நேரம் இளைப்பாற விரும்பினார் மன்னர். முனிவரும் சம்மதித்தார்.

அப்பொழுது மேலே பார்த்தார் முனிவர். அந்த மரத்தின் கிளை மேல் கருடன் ஒன்று



பெரிய நாகத்தை தூக்கி வந்து தின்பதற்காக உட்கார்ந்திருந்தது. அந்த மரத்தின் கிளை அரசனுடைய மூக்குக்கு நேராக இருந்தது.

மாமுனிவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எழுந்து கருடனை விரட்டினால் மன்னனது தூக்கம் கெட்டு விடும். நாகத்தினால் அரசனுக்கு தீங்கில்லை என நினைத்து விட்டு விட்டார். கருடன் பாம்பை கொத்தியது. பாம்பு தன் விடத்தை கக்கவே அது மன்னனின் கழுத்தில் வந்து விழுந்தது.

கால சர்ப்பத்தின் விஷம் என்ன ஆகுமோ என பயந்த முனிவர், தன் கத்தியால் அதை வழிக்க நினைத்தார். அப்பொழுது லட்சுமி, "நான் தங்களை விட்டு போக வேண்டிய நேரம் வந்து விட்டது செல்கிறேன்," என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டாள்.

கத்தியை எடுத்து அரசரின் கழுத்தில் வைத்தார் முனிவர். உடனே கண் விழித்தான் அரசன், "இப்படிப்பட்ட பாதக செயலை நீங்கள் செய்வீர்கள் என்று நான் சிறிதும் நினைக்கவில்லை," என்று கோபப்பட்டான்.

முனிவரோ, "மன்னா நான் உன்னை கொல்ல வேண்டுமென்றால் எப்பொழுதோ கொன்றிருக்கலாம். சற்று தலையை தூக்கிப் பாருங்கள். கருடன் வாயிலிருக்கும் பாம்பின் வாயிலிருந்து ஒரு துளி விஷம் உங்கள் கழுத்தில் விழுந்துவிட்டது. அதை எடுக்கவே இப்படி செய்தேன். இனி நான் உங்களுடன் இருக்க மாட்டேன். லட்சுமி கடாட்சம் என்னை விட்டு போய்விட்டது," என்றார்.

மன்னன் மிகவும் மன்னிப்பு கேட்டான். தாங்கள் என்னை விட்டு செல்லக்கூடாது என கூறினான்.

நடந்தவைகளை எல்லாம் கூறிய முனிவர், "எனக்கு என்ன இருக்கிறது. நான் ஒரு முனிவர். லட்சுமி என்னுடன் இருந்தவரையில் எனக்கு ஆபத்து இல்லை. இனி நான் தங்களுடன் இருப்பதில் பயனில்லை. விடை கொடுங்கள் நான் காட்டிற்கு செல்கிறேன்," என்றார்.

மன்னன் எவ்வளவோ கெஞ்சியும் முனிவர் அவருடன் இருக்க சம்மதிக்கவில்லை. தன்னை விட்டு லட்சுமி போன பிறகு மன்னனுடன் இருப்பது தனக்கு மிகுந்த ஆபத்தை தரும் என்பதை உணர்ந்து அரசனிடம் விடைபெற்று காட்டிற்கு சென்றார் முனிவர்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பிறருடைய துன்பங்களை நினைத்துப் பார்ப்பதால் நம்முடைய துன்பங்களை சகிக்கக் கற்றுக்கொள்கின்றோம். -மார்க் ட்வைன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அதீத வெப்ப அலை அடித்தும் நாம் அசண்டையாய் இருப்பது ஏன்?

தற்போது நிலவுகின்ற அதீத வெப்பநிலை தொடர்பில் துறைசார் நிபுணர்கள் எச்சரிக்கை செய்த வண்ணமுள்ளனர்.

உச்சமடைந்துள்ள வெப்பம் காரணமாக மதியவேளைகளில் வெளியில் நடமாடுவதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதவிர, கடும் வெப்பம் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நான்கு பேர் மரணமடைந்துள்ளதாகவும் இந்த மரணம் அதிக வெப்ப அலையின் தாக்கத்தால் ஏற்படக்கூடிய கீற் ஸ்ரோக் காரணமாக சம்பவித்துள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஆக, கடந்த பல நாட்களாக நிலவிவரும் கடும் வெப்ப அலை தொடர்பில் அனைவரும் கவனமாக இருப்பதுடன் கடும் வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து தங்களைப் பாதுகாக்கின்ற ஒழுங்குகளையும் செய்தாக வேண்டும்.

அந்த வகையில் கடும் வெப்பத்தின் தாக்கத்திலிருந்து ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு அடிக்கடி தண்ணீர் குடிப்பது, குளிரூட்டப்பட்ட தண்ணீர் பருகுவதைத் தவிர்ப்பது, வெயில் நேரங்களில் வெளியில் செல்லாமல் இருப்பது ஆகிய வற்றைப் பின்பற்ற வேண்டும்.

எனினும் கடும் வெப்பம் தொடர்பில் எவருமே கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. அதிலும் குறிப்பாக கட்டடத் தொழிலாளர்கள் கடும் வெயிலின் மத்தியிலும் தொடர்ந்து வேலை செய்வதைக் காண முடிகின்றது.

இதைவிட மிகப் பரிதாபமான விடயமாக தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வருகின்ற மாணவர்களின் நிலைமை உள்ளது.

ஆம், நடு வெயிலில் ஒரு தனியார் கல்வி நிறுவனத்தில் இருந்து இன்னொரு தனியார் கல்வி நிறுவனத்தை நோக்கி மாணவர்கள் நகர்வடைகின்றனர்.

அதேநேரம் தூர இடங்களில் இருந்து வருகின்ற மாணவர்களுக்கு சுத்தமான குடிநீரும் கிடைப்பதாக இல்லை.

நிலைமை இதுவாக இருக்க, தனியார் கல்வி நிறுவனங்களில் நடைபெறுகின்ற வகுப்புக்கள் நிறைவடைகின்ற நேரமும் உச்சி வெயிலாக இருப்பதால், அந்த மாணவர்கள் கடும் வெயிலுக்குள் நடந்து செல்கின்ற பரிதாபத்தைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக உள்ளது.

படிப்பு என்பது மிகவும் முக்கியமானது. ஆனால் அதைவிட முக்கியம் ஒவ்வொருவரதும் ஆரோக்கியம்.

எனவே தனியார் கல்வி நிறுவனங்கள் வகுப்புகளை காலை, மாலைப் பொழுதுகளில் நடத்துவதுடன் தத்தம் கல்வி நிறுவனங்களில் குடிநீர் வசதிகளையும் காற்றாடி வசதிகளையும் தாராளமாகச் செய்து கொடுக்க வேண்டும்.

கூடவே மதியவேளையில் மாணவர்கள் வெளியில் செல்வதைத் தவிர்க்கும் வகையில் வகுப்பு நேரங்களை ஒழுங்குபடுத்துவதும் அவசியமாகும்.

# பரீட்சை மண்டபத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லுங்கள்

## நீர்ச்சத்து குறைபாட்டை நிவர்த்திக்கலாம் என அறிவுறுத்து

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வெப்பம் காரணமாக மாணவர்களுக்கு பரீட்சைக்கு முகம் கொடுக்க முடியாத நிலை காணப்படுவதாக கொழும்பு ரிட்ஜ்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் வெப்பமான காலநிலை நிலவுவதால் நீர்ச்சத்து குறைபாடு மற்றும் உஷ்ண அலர்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் பரீட்சைக்கு செல்லும் மாணவர்களுக்கு சிரமம் ஏற்படுவதாகவும் அதனை தவிர்க்க நீர் உள்ளிட்ட இயற்கை பானங்களை பயன்படுத்துவது மிகவும் அவசியமானது எனவும் தெரிவித்தார்.

பரீட்சை அறைக்கு செல்லும் மாணவர்கள் தண்ணீர் போத்தலை எடுத்துச் செல்வது கட்டாயமாகும் என குறிப்பிட்ட தோடு பரீட்சை எழுதும் போது தண்ணீர் அருந்துவது அவசியமாகும் எனவும் வலியுத்தியுள்ளார்.

தண்ணீர் அருந்துவதற்கு எடுக்கும் சில நிமிடங்களை வீணடிப்பதாக நினைக்கலாம், ஆனால் அதைவிட பரீட்சை காலம் முழுவதும் ஆரோக்கியமாக பரீட்சையை எதிர்கொள்ளும் திறனைப் பேண வேண்டும்.

மேலும் இந்த நாட்களில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இளநீர், சூப், கஞ்சி, பழச்சாறு போன்றவற்றை அருந்த வேண்டும். நீரிழப்பு மற்றும் வெப்ப அதிர்ச்சியில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

செயற்கை இனிப்பு பானங்கள் அல்லது பிற செயற்கை பானங்களை பயன்படுத்துவதால் நீர்ச்சத்து குறையும். எனவே இயற்கை திரவங்களை உள்ளெடுத்து செயற்கை திரவங்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## மன்னார் பூநகரி காற்றாலை மின்னுற்பத்தி அதானி நிறுவனத்திற்கு வழங்க அனுமதி

(கொழும்பு)

மன்னார் மற்றும் பூநகரி பிரதேசத்தில் 484 மெகாவாட் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக, குறித்த நிலையத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தியாவின் M/s Adani Green Energy Limited இனால் மன்னார் மற்றும் பூநகரி பிரதேசத்தில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு கடந்த 2022 ஆம் ஆண்டு 3 ஆம் மாதம் 7 ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவை மதிப்பீடு செய்வதற்காக அமைச்சரவையால் பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழு நியமிக்கப்பட்டது.

குறித்த குழுவின் விதந்துரைகளின் பிரகாரம் உத்தேசக் கருத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்னலகொன்று கிலோவாற்ஸ் மணிக்கு 8.26 சதம் அமெரிக்க டொலரை இறுதிக் கட்டணமாக அங்கீகரிப்பதற்கும் 20 வருடங்களுக்கு மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான விலை மனுக்கோரலை M/s Adani Green Energy SL Limited இற்கு வழங்குவதற்கும், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

## உள்ளகப் பயிற்சிக்காக காத்திருக்கும் 359 சித்த மருத்துவ மாணவர்கள்

### எமக்கு விடிவு கிடைக்குமா என பாதிக்கப்பட்ட மாணவர்கள் கேள்வி?

(யாழ்ப்பாணம்)

ஆயுர்வேதத் திணைக்களத்தின் குளறுபடியான சில நடவடிக்கைகள் மூலம் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம் என சித்த மருத்துவ மாணவர்களின் பிரநிதியான வர்ணகுலசிங்கம் பிரவீன் தெரி வித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை பூராகவும் 359 சித்த மருத்துவ மாணவர்கள் உள்ளக பயிற்சிக்காக காத்திருக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 60 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கி இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

உள்ளக பயிற்சி என்பது அனைத்து மாணவர்களுக்குமான உரி மையாகும். எவ்வாறு 60 மாணவர்களுக்கு மாத்திரம் இந்த அனுமதியினைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்க முடியும்.

அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு காரணமாகவே இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. அவ்வாறாயின் அது அரசாங்கத்தின் தவறு ஒழிய மாணவர்களுடைய தவறல்ல.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் நமது கற்கை நெறியை பூரணமாக நிறைவு செய்ய முடியாத நிலையில் இருக்கின்றோம்.

தற்பொழுது 30 வயதினை எட்டி இருக்கின்ற போதிலும் நீண்ட காலமாக உள்ளகப் பயிற்சியினை முடிக்காததனால் எமது கற்கை பூரணப்படுத்தப்படவில்லை. உள்ளக பயிற்சி நிறைவு செய் யப்பட்டால் மாத்திரமே ஆயுர்வேத சங்கத்தில் எங்களை ஒரு வைத்தியராக பதிவு செய்ய முடியும். எனவே நமது எதிர்காலத்தை கருத்தில் எடுத்து கற்கை நெறியை பூர்த்தி செய்ய ஏதுவாக உள்ளக பயற்சியை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோருகிறோம் என அவர் தெரிவித்தார். (நி-33)

## தேசிய மாகாண பாடசாலைகளில் நிலவும்

## ஆங்கில பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்கு டிப்ளோமாதாரர்களை நியமிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் போட்டிகளில் நிலவும் ஆங்கிலப் பாட ஆசிரியர் வெற்றிடங்களுக்கு டிப்ளோமாதாரர்கள் இலங்கையின் ஆசிரியர் தரத்தின் மூன்றாம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நேர்முகப் பரீட்சைக்கு 2267 பேர் தகுதி பெற்றுள்ளனர். இதற்கான நேர்முகப் பரீட்சை இன்று 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மேற்படி ஆங்கில ஆசிரியர் ஆட்சேர்ப்பு தொடர்பில் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி நடத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் நேர்முகப்பரீட்சைக்கு 2267 பேர் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுக்கான தகைமைகளை பரீட்சிப்பதற்கான பொது நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை இன்று முதல் 5 தினங்கள் (8,9,10,11 மற்றும் 13) பத்தரமுல்ல இசுறுபாய கல்வி அமைச்சில் இடம் பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு தகைமை பெற்றவர்கள் குறிப்பிட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் நகல் பிரதிகளை தனித்தனியாக இணைத்து தயாரிக்கப்பட்ட இரண்டு பிரத்தியேக கோவைகள் சகிதம் நேர்முகப் பரீட்சைக்கு கலந்து கொள்ள வேண்டு மெனவும் இதில் நகல் பிரதிகள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுபவர்களினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்கள் நேர் முகப்பரீட்சையில் முன்னிலைப் படுத்துவது அவசியமானதாகும். பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியவாதிகள் தம் நேரிய பயணத்திலிருந்து சற்றும் விலகார்

## பேராசிரியர் வித்தியானந்தனின் நூற்றாண்டு விழா இன்று



**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"**

என்ற தாயுமானவர் வாசகத்தை பேராசிரியர் சு.வித்தியானந்தன் தான் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் முதலில் கூறியே தனது உரையை ஆரம்பிப்பார். வெறும் உரைத்தலோடு மட்டும் நின்று விடாது தனது வாழ்நாளை அதன்வழி பயன்படுத்தவும் அவர் தவறவில்லை என்பதை தமிழ்கூறு நல்லுலகம் நன்கறியும்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழர் நாட்டார் கலைகளின் மலர்ச்சிக்கும் அவர் ஆற்றிய பணி கண்டு தமிழ் அன்னையும் தமிழ் உலகும் மகிழ்ந்து சிலிர்த்தனர். அவரிடம் தமிழ் கேட்பதே தனி இன்பம். தமிழைத் தமிழாகவே பயன்படுத்த வேண்டும் என்பதில் உறுதி கொண்ட தமிழ் அறிஞர் அவர். அவரது தமிழ்ப் பற்று "பெற்ற தாயின் மேல் கொள்ளும் அன்பு" போன்று புனிதம் நிறைந்தது.

தமிழ் மொழி மீது கொண்ட பற்றுப் போன்று தமிழ் மண்ணையும் தமிழ் சமூகத்தையும் ஆழ நேசித்தார். அவை பயனுற சேவை ஆற்ற வேண்டும் என்பதில் அக்கறை கொண்டு உழைத்தார். உதவி தேவைப்படு வோர்க்குத் தன்னால் முடிந்தவற்றை மகிழ்ந்து செய்தார்.

"உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்து விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து கொள்வோன் கொள்வதை அறிந்த வளன்கொள"

எனும் நன்னூல் உரைக்கும் நல்லாசிரியர் இலக்கணத்தை உள்வாங்கி, அதற்கமையக் கற்பித்து, மாணவர் உள்ளங்களைக் கவர்ந்த பேராசான் அவர்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் நீண்ட மாணவர் பரம்பரை கொண்டவர். அதை இங்கு கூறப்புகின் பட்டியல் நீளும். பல்கலைக் கழகங்களில், பாடசாலைகளில், ஊடகத்துறைகளில் நிர்வாகத் துறையில் உயர் பதவிகள் வகித்து சிறப்புப் பெற்றுள்ளார்கள். பலர் இன்றும் நன்றி உணர்வுடன் பேராசிரியர் புகழ் பாடித் துதிக்கின்றார்கள்.

நூற்றாண்டு மலர் தொடர்பாக அவர்களுடன் தொடர்பு கொண்டபோது எமை ஊக்குவித்து, மகிழ்வுடன் ஆக்கங்களைத் தந்துதவினர் எனும் போது, அவர்கள் தமது ஆசிரியர் மீது கொண்ட அன்பின் ஆழத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது.

பேராசிரியர் தனது பேராண்மை கொண்ட நோக்கில் இலங்கையில் வடக்கு, கிழக்கு, மலையகம், கிறிஸ்தவர், இஸ்லாமியர், ஏழை, பணம் படைத்தோர் என்ற அனைவரையும் ஒரே சமமான பார்வையிலேயே கண்டார். சமூகத்தில் புரையோடிய ஏற்றத் தாழ்வுகளைப் புறந்தள்ளி சமநிலை கண்டார். அவரது சமூகப் பற்றுடைமை வியக்க வைத்தது.

அவரது அந்தச் சமூகப் பற்றும் அது தொடர்பான செயல்நிலையும் ஒரு சமயம் அவரது வாழ்வில் அவருக்குப் பெரும் இழப்பையும் ஏற்படுத்தி, பெரும் அவலத்தைக் கொடுத்திருந்தது. அது அவரது வாழ்வில் ஏற்பட்ட பெரும் துன்பியல் சம்பவமாயிற்று.

**துன்பியல் சம்பவம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதற் துணைவேந்தராகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் கடமையாற்றிய காலமது. அக்கால அரசியல் குழப்ப நிலை, இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகள் என பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து, பலத்த மட்டுப்பாடுகள் காணப்பட்டபோதும் பல்கலைக் கழகத்தைத் தொய்வின்றி, தனது நிகரற்ற ஆளுமைத் துணையுடன் நடத்தி வந்தார். தனது காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினை, முழு நிறை பல்கலைக்கழகமாக்கி, அதன்வழி எமது சமூகத்தைப் பயன் அடையச் செய்ய வேண்டும் என்கிற அவா அவருக்கு ஆழமாக இருந்தது.

அதற்காக மெய் வருத்தம் பாராது இரவு பகலாகக் கடுமையாக உழைத்து வந்தார். அன்று அங்கிருந்த துறைகளுடன் விவசாய பீடம், பொறியியற் பீடம், மருத்துவ பீடம் ஆகியவற்றையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனை அவரிடம் மேலேழுந்திருந்தது. அதற்கான திட்டங்களை முன்வைத்து நகர்த்திச் செயற்படலானார்.

முதலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். அங்கு தோன்றிய பல தடைகளை மிகச் சாதுரியமாக வெற்றி கண்டு, இறுதியில் மருத்துவ பீடம் அமைப்பதில் உள்ள சாதக பாதக காரணிகளைச் சீர்தூக்கி முடிவு காண்பது தொடர்பான மிக முக்கியம் வாய்ந்த கூட்டமொன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் ஏற்பாடாயிற்று. தென்னிலங்கையில் இருந்து பல கல்வியியலாளர்கள், பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக் குழு அங்கத்தவர்கள், யாழ்.பல்கலைக் கழக பேரவை உறுப்பினர்கள் எனப் பலர் அங்கு கூடியிருந்தார்கள்.

**கூட்டம் ஆரம்பமாயிற்று**

உபவேந்தர் என்ற முறையிலும் அன்றைய கூட்டத்தின் தலைவர் என்ற முறையிலும் பேராசிரியர் வித்தியானந்தன் கூட்டத்தினை வெகு நிதானமாகக் கவனக் குவிப்புடன் நெறிப்படுத்திய வண்ணமிருந்தார்.

எந்தத் தடை வந்தாலும் அவற்றைத் தாண்டி மருத்துவ பீடத்தை இங்கு நிறுவிக் கொள்ள வேண்டும். அதனால் ஆயிரம் ஆயிரம் வைத்தியர்கள் எமது மண்ணில் சேவை புரிந்திட வழியேற்படும். அதனவழி எமது சமூகம் நன்மை பெறும் என்ற தீர்க்கதரிசனமான சிந்தனை அவரிடம்.

சமூகத்தை, எவ்வித எதிர்பார்ப்புமின்றி நேசிப்பவராலேதான் இவ்வாறு சிந்திக்க முடியும். பேராசிரியர் அவ்வாறே சிந்தித்தார். அவரது சமூகவியல் சிந்தனை உயர்வானது. புனிதமானது. சமூகவியல் நோக்கில் கல்வியியலாளர்கள் சிந்தித்துச் செயற்படும் போது சமூக வளர்ச்சி துரிதமாக மேலெழும் என்பதே ஆன்றோர் கருத்து.

கூட்டத்தில் அவ்வப்போது தோன்றிய மட்டுப்பாடுகளை உடனுக்குடன் தனது ஆளுமை வீச்சால் நிவர்த்திசெய்து, நோக்கை சாதகமாக்கிய வண்ணம் கூட்டத்தினை நெறிப்படுத்திக் கொண்டு இருந்தார். இன்னும் சிறிது நேரத்தில் நல்ல முடிவை எட்டி விடலாம் என்ற நம்பிக்கை ஒளி அவருக்குத் தெரிய ஆரம்பித்தது. அந்த நேரத்திலேதான் அந்தத் துன்பியல் சம்பவம்.

அவரது தொலை பேசி அழைத்தது. அழைத்தவர் அவரது மூத்த புதல்வர்.

"அப்பா, அம்மாவுக்குக் கடும் உடல் நலக் குறைவாக உள்ளது. நான் வைத்தியரிடம் அழைத்துச் செல்ல முயற்சித்தும் வர மறுக்கின்றார். அப்பா வரட்டும், போகலாம் என்று கூறுகின்றார். உங்களால் இப்போது வரமுடியுமா?"

பேராசிரியர் பெரும் சங்கடத்துக்குள்ளாயினார். மருத்துவ பீடம் அமைத்தல் தொடர்பான முடிவு எட்டும் வேளை இடைநடுவில்சென்றால் முடிவு பாதகமாக அமைந்துவிடலாம்?

இலட்சியவாதிகள் தம் நோக்கில் எத்தடைகள் வந்தாலும், எவ்வித துன்பம் நேர்ந்தாலும் கொண்ட குறியில் இருந்து விலக மாட்டார் என்பதைக் கற்றிருக்கின்றோம். இங்கே அனுபவத்தில் கண்டுகொள்ள முடிந்தது.

பேராசிரியர் தனது அப்போதைய சூழ்நிலையை மகனுக்கு விளக்கி, "இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடுவேன். முக்கியமான கூட்டம். இடைநடுவில் வந்தால் எல்லாம் குழம்பி விடும். அம்மாவிடம் கூறுங்கள். விரைவில் வருவேன்" என்று கூறித் தொலைபேசியைத் துண்டித்துக் கூட்டத்தில் ஐக்கியமாகிக் கொள்கின்றார்.

சற்று நேரத்தில் முடிவுற்றுவிடும் என்று நினைத்த கூட்டம் நீண்டு செல்கின்றது. பேராசிரியருக்கு கூட்ட செயற்பாட்டில் கவனம் முழுமையாகக் குவிந்ததே தவிர வேறொன்றும் நினைவில் இல்லை. துணைவியாரின் உடல் நலக் குறைவு என்ற செய்தி அவரது கூட்ட செயலொழுங்கில் தடையேதும் ஏற்படுத்தவில்லை.

அங்கே அவரது துணைவியாரின் உடல்நிலை மேலும் மோசமாகின்றது. மகன் தொலைபேசியில் மீண்டும் அழைத்து நிலைமையைக் கூறுகின்றார்.

பேராசிரியர். வித்தியானந்தனுடனும் அவரது துணைவியாருடனும்,அவரது சகோதரர் எனது நண்பர் குணநிதி மூலம் மதிப்புயர் தொடர்பு கொண்டவன் என்ற வகையில், இந்தச் சந்தர்ப்ப நினைவுகள் பலதடவை என் அடி மனதில் இருந்து வெளிக் கிளம்பி இன்றும் என்னைச் சஞ்சலப்படுத்துவதுண்டு.

பேராசிரியர் எவ்வாறு சமாளித்தாரோ? ஆனால், அவர் நிலை தளம்பவில்லை. நிறைவானவர்கள், மாமனிதர்கள் இப்படியான இக்கட்டான நேரங்களில் எவ்வாறு செயற்படுவார்கள், செயற்படவேண்டும் என்பதை என் போன்ற அவரது மாணவர்களுக்கும் மற்றும் சமூகத்துக்கும் வாழ்ந்து காட்டிக் கற்பித்தார்.

"இதோ இன்னும் சிறிது நேரத்தில் அங்கே நிற்பேன். அம்மாவை வைத்தியரிடம் அழைத்துச் செல்லுங்கள்." என்று கூறி தொலைபேசியை அவசரமாகத் துண்டித்து கூட்டத்தில் கலந்து கொள்கிறார். கூட்டம் தொடர்கின்றது. முடிவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடம் அமைவதற்கான நல்ல முடிவு காணப்பட்டது.

பேராசிரியருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தனது சமூகத்துக்கு பெரும் தொண்டு ஆற்றிவிட்ட மன நிறைவு அவருக்கு. கலந்து கொண்டோருக்கு மகிழ்ச்சி பொங்க நன்றி கூறிப் பூரித்து நின்றார்.

தொலைபேசி மீண்டும் அழைத்தது. மகன் பலத்த அழுகையுடன்; "அப்பா வைத்தியர் வீட்டுக்கு உடன் வாருங்கோ" என்று கூறி அழைப்பைத் துண்டித்துக் கொள்கின்றார்.

பேராசிரியர் அவசர அவசரமாக அங்கு விரைந்தார். அங்கு சென்று தாமதத்துக்கு காரணத்தை மனைவியிடம் கூறி, கிடைத்த வெற்றியைத் தெரியப்படுத்தினால் அவர் மகிழ்வார், நோய் குணமாகிவிடும் என்று கற்பனையில் சென்றார்.

வைத்தியர் வீட்டு வாயிலில் அவரது பிள்ளைகள் கவலையுடன் நின்றனர். அவர்களிடம் பதற்றம் காணப்பட்டது.

இவர் வருகையைக் கண்டவுடன் பலத்து ஓலமிட்டு "அப்பா, அம்மா எங்களையெல்லாம் விட்டுவிட்டுப் போய் விட்டா. அப்பா வந்துட்டாரா, அப்பா வந்துட்டாரா என்று கேட்டுக்கொண்டே போய்விட்டா." என்று அவரைக் கட்டி அழுது புலம்பினார்கள்.

பேராசிரியர் சிலையானார். அவர் அதை சற்றும் எதிர்பார்த்திரார். எல்லோரும் வாழவேண்டும், தனது சமூகம் சிறக்க வேண்டும் என்று உதவி உழைத்த மனம் என்ன பாடுபட்டிருக்கும்?

அழைப்பு பலமுறை வந்தும், நிலைமையின் தீவிரம் புரிந்தும், நல்லது தானே செய்கின்றேன், தீதெதுவும் நடைபெறாது என்ற எண்ண ஓட்டத்தில் தாமதம் செய்து கடமையில் ஈடுபட்டார். ஆனால், விதி வேறு விதமாகச் செயற்படப் போவதை அவரால் அறிய முடியவில்லை. ஒன்றின் அஸ்தமனத்தில் இன்னொன்று உதயமாகும் என்ற நியதி அன்று அவர் வாழ்வில் அநுபவமாகியது.

"என் துணைவியார் இவ்வுலகை விட்டுச் சென்ற நேரமும் யாழ்.பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் நிறுவ முடிவான நேரமும் ஒன்றானது காணும்." என்று பின்னாளில் எம்மிடம் கூறி ஆதங்கம் கொண்டார். நானும் அவர் சகோதரர் குணநிதியும் கலங்கி நின்றோம்.

தன்னை வருத்தி, தன் துணை இழந்து தனது சமூகத்துக்குப் பெருந் தொண்டு செய்த பேருள்ளம் அவருக்கு. அவரினால் இன்று எத்தனை எத்தனை ஆயிரம் தகுதி நிறைந்த வைத்தியர்களை எமது சமூகம் பெற்றுப் பயனடைகின்றது.

இன்னும் பிற்காலத்தில் அவர் விருப்பப்படி யாழ்.பல்கலைக் கழகத்தில் விவசாயத்துறை, பொறியியற் துறை ஆகியனவும் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கான விதை பேராசிரியர்.சு. வித்தியானந்தனால் இடப்பட்டதே.

சமூகத்தை நேசித்து தீர்க்கதரிசனத்துடன் செயற்பட்ட அந்த மாமனிதர் நினைவுகள் தமிழ் கூறு நல்லுலகில் பல்லூழி நிலைத்து வாழ்ந்து வழி காட்டும் என்பது நிதர்சனமானது.

கலாநிதி
திருநாவுக்கரசு கமலநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதியரசர்...

யுள்ளார்.

அதன்படி, குறித்த ஐவர் அடங்கிய நீதியரசர்கள் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட நீதிபதி எஸ்.துரைராஜா நேற்று முன்தினம் அந்தக் குழுவில் இருந்து விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## மல்லாகத்தில்...

யிட்டதுடன் உரிமையாளரை கைது செய்து ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவித்ததுடன் காணாமல்போன பசுக்கள் இங்கு வெட்டப்பட்டமை தொடர்பாகவும் சட்டவிரோதமாக வெட்டப்படும் மாடுகளின் இறைச்சிகள் வேறு பிரதேசங்களிற்கு கடத்தப்படுவது தொடர்பாகவும் தொடர் விசாரணையை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க தெல்லிப்பழை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்காக சிரேஷ்ட சட்டத்தரணி வி.மணிவண்ணன் மற்றும் சட்டத் தரணி சிவதர்சன் ஆகியோர் ஆஜராகி சமர்ப்பணங்களை செய்தனர்.

குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டவர் சார்பில் சட்டத்தரணி பார்த்தீபன் ஆஜரானார்.

சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் பரா. நந்தகுமார் தலைமையில் பொதுசுகாதார பரிசோதகர் கடம்ப ருபன் உமாசுதன் குழுவினரால் நூற் றுக்கணக்கான மாடுகளின் கயிற்று துண்டங்கள், இறைச்சி வெட்டும் கத்தி, வெட்டும் மரக்குற்றிகள் பொதி யிடும் பல கொல்கலன்கள் தராசு இறைச்சி தொங்கவிடும் கம்பிகள் சான்று பொருட்களாகவும் மற்றும் பாரிய சட்டவிரோத கொல்கலனின் இரத்தம் தோய்ந்த புகைப்படங்களும் சான்றாதாரங்களாக நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டன.

இது யாழில் இவ்வாரத்தில் இரண்டாவது பாரிய சட்டவிரோத கொல்கலன் சீல் வைக்கப்படும் சந்தர்ப்பமாகும். (ம-7,10)

## யாழில்...

விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் நுழைந்து இராணுவ முகாமில் கடமையில் நின்ற இராணுவ வீரரை காணொளி எடுத்தது மட்டுமன்றி "டுப்பு டுப்புனு சுடுறீனங்களா? உண்மையான துவக்கா" என கிண்டலடித்துள்ளார்.

இவ்வாறு கடமையில் இருக்கும் ஒரு இராணுவத்தினரை காணொளி எடுத்து நக்கலடித்து அதனை சமூக ஊடகத்தில் பகிர்ந்தமை தொடர்பில் பலரும் தமது விமர்சனங்களை தெரிவித்து வருகின்றனர். (ம-7,10)

## அதீத வெப்பம்...

படுகிறது.

ஒரு மனிதனின் உடலானது 40.5 செண்டிகிரேட் அல்லது 105 பரனைட் வெப்பத்தையே தாங்கும். அதன்னை தாண்டும்போது, தீவிரமான பாதிப்புகள் ஏற்படும். அதனால் வியர்வை அதிகரிப்பு, வியர்குருக்கள் போடுதல், போன்றவை ஏற்படும். வியர்வை அதிகரிப்பால், உடலில் நீரின் அளவு குறைவடைந்து மயக்கம் ஏற்படும்.

இந்நிலை தொடர்கின்ற போது "ஹீற் ஸ்ரோக்" ஏற்படும். அத்துடன், சிறுநீரகம், இருதயம், சுவாசப்பை போன்றவை செயல் இழக்கும். அதே வேளை குருதி சிறுதட்டுக்களின் எண்ணிக்கை குறைவடைந்து, உடல் நிலை மிக மோசமாக பாதிக்கப்படும். மூளை செயல் இழந்து மயக்கம் ஏற்படும் சம்பவங்களும் நிகழும்.

யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்று வந்த சுமார் 05 பேர் "ஹீற் ஸ்ரோக்" காரணமாக உயிரிழந்துள்ளனர். அவர்களின் உயிரிழப்புக்கு அவர்களுக்கு ஏற்கெனவே இருந்த நோய் நிலைமைகள் காரணமாக இருந்தாலும், அதிகரித்த வெப்ப நிலையே நோயினை தீவிரப்படுத்தி அவர்களின் உயிரிழப்புக்கு காரணமாகும். எனவே எம்மை வெப்பத்தின் பேராபத்தான நிலையில் இருந்து எம்மை காப்பாற்றி கொள்ள வேண்டும் என்றார். (ம-7,10)

## தமிழ்க் கைதி...

படாமல் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் மூதூரைச் சேர்ந்த எஸ்.சுதாகரன் ஆகிய இருவரையும் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் நேற்று கொழும்பு விளக்க மறியல் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது தனது விடுதலையை வலியுறுத்தி கடந்த இரண்டு நாட்களாக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆனந்தவர்ணன், தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரியதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று மூதூரைச் சேரந்த எஸ்.சுதாகரன் என்பவரும் இந்தியாவிலிருந்து திரும்பும்போது கைது செய்யப்பட்டு கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், தனது விடுதலைக்காக நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார். (ம-7,10)

## கிளிநொச்சியில்...

ஏற்றிச் சென்ற பேருந்து வீதியை திடீரென கடக்க முற்பட்டவர் மீது மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பேருந்தின் சாரதியை கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,316)

## தெல்லப்பழையில்...

மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் பாதுகாப்பு பிரிவினரிடம் நேற்று தெரிவித்தார்.

ஒட்டகப்புலம் பகுதிக்கு நேற்று விஜயம் செய்த ஆளுநர் விடுவிக்கப்பட்ட காணிகளை பார்வையிட்டதுடன், காணி உரிமையாளர்களுடனும் கலந்துரையாடினார். யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அதற்கமைய, பொன்னாலை - பருத்தித்துறை கடற்கரை வீதியில் கண்ணகி அம்மன் கோவில் சந்தியிலிருந்து நாகதம்பிரான் கோவில் வீதி ஊடாக விடுவிக்கப்பட்ட காணிக்குள் பிரவேசிக்க முடியும். அத்துடன் வீரப்பளை வீதியில் பலாலி வீதி நோக்கி 100 மீற்றர் தூரத்திற்குள்ளும் வீரப்பளை சந்தியில் தெற்கு நோக்கி தம்பாளை வீதி (விமான நிலைய வீதி ) ஊடாகவும் விடுவிக்கப்பட்ட காணிக்குள் பிரவேசிக்க முடியும். (ம-7,10,33)

## வண்டு...

முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, உரிய முறையில் சுட்டுத் துண்டுகள் இடப்படாத பொருட்கள், வண்டுகள் மொய்த்த பழுதடைந்த பொருட்கள் என்பவற்றை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி உரிமையாளருக்கு எதிராக யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வந்த நிலையில், நேற்று இடம் பெற்ற விசாரணைகளில் உரிமையாளரை குற்றவாளியாக கண்ட மன்று உரிமையாளரை கடுமையாக எச்சரித்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. (ம-7,10,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.05.07
சீட்டிழுப்பு இலக்கம் 5468
T 8 1 3 4 5 9
அத சம்பத T 3 4 5 9
சீட்டிழுப்பு இலக்கம் 0043

தன நிதானய
திகதி - 2024.05.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1498
P 15 34 51 53 P
46652

மெகா பவர்
திகதி 07/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1816
D 18 27 34 36 75
43390

லக்கி 7 VIP
திகதி 2024.05.07
சீட்டிழுப்பு இலக்கம் 0294
H 2 4 0 7 7 3 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3710
சீட்டிழுப்பு திகதி 07.05.2024
B 34 39 62 69
B 09531

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.07
சீட்டிழுப்பு இலக்கம் 0777
மீனம் 05 22 26 56 மீனம்
60695 24

உத்தியோகபூர்வ முடிவுகள்
07.05.2024 வெற்றி வாரம் 176 வர்ணம் சிவப்பு
F 3 6 0 9 3 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,833,752.00
Q 88124

SUPER BALL
சீட்டிழுப்பு 2442 07.05.2024 செவ்வாய்
03 13 43 58 P
41163
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,118,130.40

சனிதா
திகதி 2024.05.07 வெற்றி வாரம் 4603 வர்ணம் பச்சை
09 10 11 49 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,083,813.20
6 4 0 1 7

சசிரி
474 2024.05.07
15 34 38
3 2 6 1 5
ரூ.2,806,640/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4154 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.05.07 தினம் செவ்வாய்க்கிழமை
01 26 39 42
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,720,677.20
695436

L 31 13 39 42 57
1618
07.05.2024 செவ்வாய்
506970
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 521,344,507.80

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2268
சீட்டிழுப்பு திகதி : 2024.05.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.111,313,915.20
அட கோடீபதி ADA KOTIPATHI
28 33 52 56 V
868984


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி ஸ்ரீகந்தபாலன் சறோஜினிதேவி

அம்பாள் வீதி நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீகந்தபாலன் சறோஜினிதேவி அவர்கள் கடந்த திங்கட்கிழமை (06.05.2024) அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசதுரை - கமலேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் ஸ்ரீகந்தபாலன்(ஓய்வு நிலை உத்தியோகத்தர் - வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் கருணாநிதி(ஜேர்மனி), தயாநிதி(லண்டன்), உதயநிதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராஜ்ராம் (மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்), ஜெயராம்(றமணன்)(யா/தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரமணி, இந்துமதி, சிவரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அபிராமி, சிவதர்சினி ஆகியோரின் மாமியாரும் அபிரன், அனுஜன், அஜந்தன், நிதர்ஷன், நிக்ஷன், யோசுவா, ஜுலியா ஆகியோரின் அத்தையும் அருளினியன், இதிகாஷ், ஜெயமால், ஹம்சிகா, ஹம்சிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.05.2024) வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல.20, இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு.
077 711 0488 (683)
தகவல் :
குடும்பத்தினர்

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0313)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

பண்ணை வேலையாள் தேவை

குடும்பமாக தங்கியிருந்து பண்ணையில் வேலை செய்யக்கூடிய வேலையாள் தேவையாக உள்ளது.
இடம் - முல்லைத்தீவு
சம்பளம் - 55,000 - 70,000
தங்குமிடம் இலவசம் (690)
+4915216762267
+94775565876

மணமகள் தேவை

யாழ், இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள அரச திணைக்களத்தில் தொழில்புரியும் (HNDIT) மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
077 864 9878
077 634 3103 (653)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0312)

CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.
021 222 5686
076 424 7111 (511)
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்




விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-0312)
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

# அந்தியேட்டி சபிண்டீகரணமும் நன்றி நவிலலும்

கடந்த 10.04.2024 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் ஸ்ரீமான்
## சின்னராசா சிவபாலசிங்கம்
## (ஓய்வு நிலை கிராம அலுவலர்)



அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் 09.05.2024 நாளை வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பொலிகண்டி கந்தவன இந்து சமுத்திரத்தில் அஸ்தி கரைக்கப்படும். 10.00 மணியளவில் சபிண்டீகரண கிரியைகள் இடம்பெறும். இவ் இரு கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்கள், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள் மூலம் துயரத்தில் பங்கெடுத்தவர்கள், அஞ்சலியுரை நிகழ்த்திய பாராளுமன்ற உறுப்பினர், அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரமுகர்கள் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், தொலைபேசி, இணையம், முகநூல் வாயிலாக துயர் பகிர்ந்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அயராமல் உழைத்தீர்கள்
ஐயம் இன்றி வளர்த்தீர்கள் அதனால் தான்
என்னவோ ஐயா என்று
அழைத்தோமோ???
இருக்கும் போது தெய்வங்களை
எங்கெங்கோ தேடுகின்றோம்!!!
அவர்கள் இறந்த பின்னே படமாக்கி
மாலைகளை சூடுகின்றோம்!!!

(C-0308)

பொலிகண்டி 077 08 72 375
தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.